தமிழால் முடியும்

(கட்டுரைகள்)

ஆசிரியர்

தமிழர் திலகம், செந்தமிழ்ச்சிகரம்

வாழியூர். **வே. இராசவேலன்,** க.மு., கல்.மு.,

செயலாளர், கம்பன் கழகம், வாழியூர்

பேரரசு பதிப்பகம்

வாழியூர், (வழி) ஒண்ணுபுரம்-632315

திருவண்ணாமலை மாவட்டம்,

நிலைபேசி எண்: 04173-243724

அலைபேசி: 9629117069

நூல் விவரக் குறிப்பு

நூலின் பெயர் : **தமிழால் முடியும்**
பொருள் : கட்டுரைகள்
ஆசிரியர் : **வாழியூர்.வே.இராசவேலன்**
உரிமை : பதிப்பகத்தாருக்கு
பதிப்பு : முதல் பதிப்பு அக்டோபர் 2012
அளவு : கிரவுன்
வெளியீடு : **பேரரசு பதிப்பகம்**, வாழியூர் & அஞ்சல்
வழி ஒண்ணுபுரம், தி.மலை மாவட்டம்.
பக்கங்கள் : 112
படிகள் : 1000
விலை : ரூ.50/-
கணினி வடிவமைப்பு: **ஏ.பி.எம். கம்ப்யூட்டர்ஸ்**
அச்சிட்டோர்: **சத்யா ஆப்செட் பிரிண்டர்ஸ்**
கண்ணமங்கலம்–632311

உள்ளடக்கம்

நூலாசிரியரின் பெற்றோர்



வீரகங்காள் - இரா.வேங்கடாசலம்

உயிர்ச்சுடர் வழிகாட்டி வரட்டும்

என்னைஈன்(று) இப்பார்க்
கடலில் தவிக்கவிட்டுச்
சென்றுவிட்டீர்! துன்பமெனும்
பேரலைகள் – என்னையிங்கே
துன்புறுத்துங் கால்நும்
உயிர்ச்சுடர் நின்றெனக்கு
நன்னெறி காட்டிவரட் டும்.

நினைவுடன்
வாழியூர்.வே.இராசவேலன்

ஆசிரியர் குறிப்பு

பிறந்த நாள்: 25.10.1941

ஆசிரியப்பணி:

இவர் **1962**–ஆம் ஆண்டு முதல் **1979** அக்டோபர் வரை இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றினார். **1979**-ஆம் ஆண்டு நவம்பர் முதல் **1999** அக்டோபர் **24** வரை தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்.

தமிழ்த்தொண்டு:

இவருடைய கொல்லாமை என்ற கவிதை பயிற்சிக் கல்லூரி ஆண்டு விழா மலரில் வெளிவந்துள்ளது. வாழியூரில் **1979**-ஆம் ஆண்டு கம்பன் கழகம் நிறுவி அதன் செயலாளராக இருந்து இந்நாள் வரை தமிழ்த் தொண்டு புரிந்து வருகிறார். பல கவியரங்கங்களிலும், பட்டிமன்றங்களிலும், இலக்கிய மேடைகளிலும், கம்ப ராமாயண மேடைகளிலும், சேக்கிழார் மாநாடுகளிலும் பங்கேற்று பேசியிருக்கிறார். இப்பொழுதும் பேசிவருகிறார். இவருடைய குரல் வானொலியில் கதைகளாகவும், கட்டுரைகளாகவும் ஒலித்துள்ளது.

இறைத்தொண்டு:

இவர் சின்னபுத்தூர் மாரியம்மன் கோயில் அறங்காவலராக மூன்று ஆண்டுகளும், வாழியூர் இராமச்சந்திர சுவாமி கோயில் அறங்காவலராக ஓராண்டும் தொண்டாற்றி இருக்கிறார்.

மற்ற பொறுப்புகள்:

வேலூர் மலைக்கோட்டை கவியரங்கத்தின் இணை செயலாளராகவும், உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம் வேலூர் கிளையின் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார்.

படைப்புகள்:

கட்டுரைகள்: 32, சொற்பொழிவு நூல்கள்: 4, கவிதைகள்: 5, கதை:1, தொகுப்புகள்:6

பெற்ற விருதுகளும், பாராட்டுகளும்:

1987-ல் சென்னை கம்பன் கழகம் கோவை தொழிலதிபர் திரு.ஜி.கே.சுந்தரம் அவர்களின் கொடைக்கரங்களால் ஆயிரம் வெண்பொற்காசுகளை வழங்கிசிறப்பித்தது.

1991-ல் காஞ்சிபுரம் கவிதைச்சோலை கவிஞர் மன்னர்மன்னன் அவர்களின் கவிக்கரங்களால் பாவேந்தர் பட்டயம் வழங்கி சிறப்பித்தது. 1993-ல் வேலூர் இலக்கிய அன்பர்கள் வட்டம் டாக்டர்.மா.நன்னன் அவர்களின் திருக்கரங்களால் தமிழர் திலகம் விருதினை வழங்கிச்சிறப்பித்தது.

1997-ல் அனைத்திந்திய தமிழ் எழுத்தாளர் சங்கம் வேலூர் கிளை திரு.பாலசுப்பிரமணியம் அவர்களின் கொடைக் கரங்களால் புலமைப்பூங்கா விருது வழங்கிச் சிறப்பித்தது. 1997-ல் வேலூர் கம்பன் கழ[illegible] திரு.வி.இராமமூர்த்தி அவர்களின் அன்ப[illegible] கரங்களால் கம்பர்சீர் பரவுவார் விருது வழங்கி[illegible]சிறப்பித்தது.

2005-ல் மதுராந்தகம் வட்டம் மேலக்காண்டை பாரதி நற்பணி மன்றம் கவிமாமணி ஏர்வாடி இராதாகிருஷ்ணன் அவர்களின் கவிக்கரங்களால் செந்தமிழ்ச்சிகரம் விருது வழங்கப்பட்டது.

2011-ஆம் ஆண்டு கண்ணமங்கலம் லயன்ஸ் கிளப் நடத்திய மண்டல மாநாட்டின்போது லயன்ஸ் மாவட்ட ஆளுநர் பொறியாளர் திரு.ஆர்.அரிதாஸ், பேராசிரியர்.சுப.வீரபாண்டியன் ஆகியோரின் பொற்கரங்களால் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

குடும்பம்:

மனைவி: டாக்டர்.சரசுவதிராசவேலன்
அரசு பதிவுபெற்ற ஓமியோபதி மருத்துவர்

மக்கள்:

இரா.திருச்செல்விஆறுமுகம்;
இரா.சோதிலட்சுமிகருணாநிதி,பி.லிட்.,ஆசிரியர்;
இரா.மின்னொளிசீனிவாசன்,எம்.ஏ.,;
இரா.நிர்மலாசரவணன்,எம்.ஏ.,பி.எல்.,வழக்கறிஞர்
இரா.கயல்விழிபழனிவேல்,எம்.ஏ.,பி.எட்.,;
இராச.பேரரசு,பி.எஸ்ஸி.,எம்.சி.ஏ.,

திரு. எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி
B.Sc.,(Agri)
சட்டமன்ற உறுப்பினர்
கலசபாக்கம் சட்டமன்ற தொகுதி,
திருவண்ணாமலை மாவட்டம்.

போன் : 04175-233665, செல் : 9443233665

இல்லம் : 1221, அன்னை இல்லம்
தென்றல் நகர், வேங்கிக்கால்,
திருவண்ணாமலை - 606 604

நாள் : ....

வாழ்த்துரை

ஆவின்பால் இனிதென்பார் அறியார் – எமது
ஆவியினும் இனிமையுள தரிய தமிழ்மொழியாம்
தேனினிமை வுளதென்பார் தெரியார் – எமது
ஊனுயிரின் மிகவினிய துயர்வுளது தமிழாம்

என்பார் அறிஞர் ஒருவர்.

தித்திக்குந் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியேயென் முத்தமிழே.

என்பார் தமிழ்விடுதூது ஆசிரியர்.

மனோன்மணி ஆசிரியர் தமிழ்மீது அதிக பற்றுள்ளவர். அவரின் தமிழ்ப்பற்றை அந்நூலில் அமைந்துள்ள பாயிரத்திலிருந்து அறியலாம். தமிழ்த்தாயின் அடியாகத் தோன்றியவைதான் கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும்.

இத்தகைய சிறப்புமிக்க தமிழால் ஆகாதது ஒன்றுமில்லை. தமிழால் எல்லாம் முடியும் என்பதாக ஆசிரியர் கட்டுரையாக்கி நமக்கு வழங்கியுள்ளார்.

இவர் பெரும்பாலும் எடுத்துக்கொண்டது திருஞானசம்பந்தரின் அற்புதங்கள்தான். கடைசியாக வைணவத்திலிருந்து ஒரு கட்டுரை உள்ளது.

ஞானசம்மந்தருக்கு காழிப்பிள்ளை, ஆளுடைப்பிள்ளை என்ற பெயர்கள் உண்டு. இவர் பார்வதியிடம் ஞானப்பால் உண்டவர். சிறுவயதிலேயே பல தலங்களுக்குச் சென்று பதிகங்கள் பாடியவர்.

திரு.வே.இராசவேலன் பல நூல்களை எழுதியுள்ளார். அனைத்தையும் நான் படித்திருக்கிறேன். இவருடைய நூல்களை படிக்கும்போது பல நூல்களைப் படித்த உணர்வு ஏற்படுகின்றது. இவர் பல்லாண்டுகள் வாழ்வாங்கு வாழ்ந்து தமிழக்கு தொண்டாற்ற வேண்டும். எல்லா வளமும் பெறவேண்டும் என இறைவனை இறைஞ்சுகின்றேன். திரு.வாழியூர்.வே.இராசவேலன் என்னுடைய கலசபாக்கம் தொகுதியைச் சேர்ந்தவர் என்பதில் நான் பெரிதும் பெருமைப்படுகிறேன்.

அணிந்துரை

முனைவர்.பேராசிரியர் புரிசை.ச.நடராஜன், காஞ்சிபுரம்

வாழியூர்.வே.இராசவேலன் "கம்பர் சீர்பரவுவார்" என்று பாராட்டப் பெற்றவர். பல்லாண்டுகளாக வாழியூரில் கம்பனுக்கு கவின்மிகு விழா எடுக்கும் ஆர்வலர். ஆண்டுதோறும் விழாவில் தாம் எழுதிய நூல் ஒன்றை வெளியிடும் தமிழ் மறவர். இப்போது "தமிழால் முடியும்" என்றதொரு நூலை தமிழ் உலகிற்கு வாழியூரார் வழங்க முன்நிற்கிறார். நூலை வரவேற்போம். நூலாடை நெய்து தமிழ் அன்னைக்கு அணிவிக்கும் ஆசிரியரைப் போற்றுவோம்.

தமிழ் = த்+அ+ம்+இ+ழ் ஐந்து எழுத்துகளால் ஆனதொரு சொல். நமசிவாய என்றதிருப்பெயரில் வகுத்து உரைக்கின்றனர். திருமந்திரம் என்றமந்திரம் போலத் தமிழ் என்றசொல்லும் ஒரு மந்திரச் சொல்லே. தமிழை ஓதுவார்க்கு நல்லன எல்லாம் வரும் என்று வடலூர் வள்ளல்பெருமான் வகுத்துரைக்கின்றார். திருமந்திரம் என்ற திருப்பெயரில் அமைந்த நூல் ஒன்றைப் பெற்ற மொழி தமிழ் மொழியாகும்.

அருட்பெரும் ஜோதி தனிப்பெரும் கருணையான இறைவனை, தோடுடைய செவியன், விடைஏறி, தூவெண் மதிசூடி, சுடலைப் பொடிபூசி, பிரமாபுரம் மேவியபெம்மான் உள்ளம் கவர் கள்வன் என்றெல்லாம் சுட்டிக்காட்டிப் பாடியவர் அம்பிகையின் ஞானப்பால் உண்ட ஆளுடைய பிள்ளையார் என்னும் ஞானசம்பந்தர் ஆவார். அப்பெருமகனார் தமிழ் மொழியைக் கொண்டு நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களை முதன்மையாகக் கொண்டு நூலாக்கி உள்ளார் ஆசிரியர்.

கவி காளமேகப் புலவர் திருவாரூரில் பாடிய பாடல் ஒன்றின் விளக்கமாக ஒரு கட்டுரை உள்ளது. காஞ்சிபுரத்தில் பள்ளிகொண்டவனாக இருந்த பரந்தாமனை "சொன்னவண்ணம் செய்த பெருமாள்" என்று ஆக்கிய கணிகண்ணனுடைய தமிழைப் போற்றுவதாக ஒரு கட்டுரை அமைந்துள்ளது.

ஆளுடைய பிள்ளையார் என்று சைவப்பேருலகம் தலைமேல் வைத்துக் கொண்டாடும் திருஞானசம்பந்த பெருமான், திருப்பாச்சிலாச்சிரமத்தில் கொல்லிமழவன் மகளுக்கு இருந்த முயலகன் என்னும் நோயைப் போக்கினார். திருவாவடுதுறைமாசிலாமணி ஈசர் அருளால் தனது தந்தையாராகிய சிவபாத இருதயருக்கு பொற்கிழி ஒன்றினைப் பெற்றார். திருமருகலில் பாம்பு தீண்டி இறந்த மகனை உயிர்பெற்றெழச் செய்தார். திருவீழிமலையில் பஞ்சம் தீரப் படிக்காசு பெற்றார். திருமறைக்காட்டில் திருக்கதவம் மூடப் பாடினார். மதுரையில் பாண்டியனின் வெப்புநோயைப் போக்கினார் அவனை நின்றசீர் நெடுமாறன் ஆக்கினார். வைகை ஆற்றைஎதிர்த்து ஏறும் வண்ணத் தமிழ்ப் பதிகம் பாடினார். தொண்டை நாட்டு திருவோத்தூரில் ஆண்பனையைக் காய்க்குமாறு செய்தார். திருமயிலாப்பூரில் சிவனேசர் பெற்றஒரு மகளை வெந்த எலும்பிலிருந்து திருமகளாக எழுப்பினார். இவ்வண்ணம் ஞானபோனகர் நிகழ்த்திய அற்புதச் செயல்களை அழகு தமிழில், பழகு தமிழில் கட்டுரைகளாக வகுத்துக் கொடுத்துள்ளார் ஆசிரியர்.

அரிய செய்திகளை எளிய நடையில் இவர் சொல்லும் பாங்கிற்கு ஒரு சோற்றுப் பதமாகக் கீழ்வரும் பகுதியைக் காட்டலாம்.

“ஒரு காரியத்தை முன்னிட்டு ஆவலால் செய்வோரைக் குறுக்கிடலாகாது என்பது ஒரு பொது விதி. அதனால்தான் யாராவது வெளியூர் செல்லும்போது “எங்கே போகிறாய்?” எனக் கேட்பதில்லை. அதிலும் திருக்கோயிலுக்குள் வணங்கச் செல்வோரைக் குறுக்கிடவே கூடாது. அதனால்தான் திருஞானசம்பந்தர் உள்ளே செல்லும்போது எதிர் செல்லாது அம்மையார் ஒதுங்கி நின்றார். அவர் திரும்பி வரும்போதுதான் திருவடியில் வீழ்ந்தார். அடி வீழ்ந்தவரைக் கைகளால் எடுத்தமையால் தம்நாடு எடுக்கப்பட்டதாக மதித்தார் அரசியார். ஆதலால் தம் கருத்து முற்றியதென்று மதித்தார்.”

இப்பகுதி ஒரு செயலுக்கான விளக்கத்தை எளிய பாங்கில் சொல்லும் அழகுடையதாகக் திகழ்கின்றது. திருஞானசம்பந்தரை திருமடத்தில் மந்திரியாரும், அரசியாரும் அப்பெருமகனாரை ஞானத்தின் திருவுருவாக, நான்மறையின் தனித்துணையாக–மண்ணில் வளர் மலர்க்கொழுந்தாக கானத்தின் எழுபிறப்பாகக் கொண்டு மகிழ்ந்தனர். மேற்குறித்த வகைகளில் எல்லாம் ஞானசம்பந்தரைச் சேக்கிழார் காட்டுவதன் காரணத்தை ஆசிரியர் அற்புதமாக விளக்கி இருக்கின்றார் (பக்கம் 74).

தமிழால் முடியும் என்ற இந்த நன்னூல் படிப்போர் மனதில் ஒரு கேள்வியை எழுப்பும் என்று நான் கருதுகிறேன். கம்பர் வாக்குப்படி “தமிழ் என்றுமுள தென்தமிழ்” தான். ஆனால், திருஞான சம்பந்தர் முதலான பெருமக்கள் பயன்படுத்திய தமிழைத்தான் நாமும் பேசுகிறோம்; படிக்கிறோம்; பாடுகிறோம்; எழுதுகிறோம்;

எனினும் அப்பெருமக்கள் நிகழ்த்திய அற்புதங்களைப் போல நம்மால் ஏன் தமிழைக் கொண்டு நிகழ்த்த முடியவில்லை? என்ற கேள்வி நம்முள் எழுகின்றது. மனத்தினில் தூய்மையும், வாக்கினில் நேர்மையும், உலக உயிர்கள்பால் இரக்கமும், மேலான பரம்பொருள் இடத்தில் பற்றும் கொண்டவர்கள் அவர்கள். அவர்களும் பெரியவர்கள். அவர்கள் பயன்படுத்திய தமிழும் பெரியது. இன்றைக்கும், ஏன் என்றைக்கும் தமிழ்மொழிக்கு வற்றாத ஆற்றல் உண்டு. அம்மொழியைக் கையாளும் நம்மனோர்க்குத்தான் தவம், நோன்பு, சீலம், கருணை, பக்தி முதலியன குறைவாக உள்ளன. எனவே "தமிழால் முடியும்'' என்ற நூல் தூய்மை முதலான நல்லொழுக்கங்களை வளர்த்துக் கொண்டால்தான் நாம் பேசும் மொழியால் வெற்றிபெற முடியும் என்ற கருத்தினை மக்கள் மனங்களில் விதையாக விழுமானால் இந்நூல் வெற்றி பெற்றது என்று கூறலாம். தமிழும் வெல்லவேண்டும். அம்மொழி பேசும் இனமும் வெல்ல வேண்டும். அதுதான் நம் நாட்டிற்கு நல்லது; உலகிற்கும் நல்லது.

நூலாசிரியருக்குப் பாராட்டு. "தமிழால் முடியும்" என்றதலைப்பு நன்று. தொடர்ந்து இதே தலைப்பில் பல அருளாளர்களின் அற்புதங்களை, இறைஉணர்வோடு எழுதிக்காட்டும் வல்லமையும், வளமையும் வாழியூரார்க்குத் திருவருள் வழங்குவதாக! வாழ்க!

சரஸ்வதி நிலையம் | அன்புடைய,
காஞ்சிபுரம் | புரிசை.ச.நடராசன்
04.08.2012

ஆசியுரை

மரபுக்கவிஞர் **இரா.சிவஞானவள்ளல்**, வேலூர்

தமிழ் என்றாலே இனிமை என்று பொருள். இனிமையான தமிழ் மொழி, தோன்றிய காலம் இதுதான் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியாது.

மாந்தர் தங்கள் கருத்துகளைக்

கையினால் உரை காலம் இரிந்திட
பைய நாவை அசைத்த பைந்தமிழ்
ஐயை, ஆனவள் அருந்தமிழ் அன்னை.

தமிழின் அருமையைக் கூறவந்த மொழி ஞாயிறு. ஞா.தேவநேய பாவாணர் அவர்கள், நம் தமிழ்மொழி,

தொன்மை	*முன்மை*
எண்மை	*ஒண்மை*
இளமை	*வளமை*
தாய்மை	*தூய்மை*
செம்மை	*மும்மை*
இனிமை	*தனிமை*
பெருமை	*திருமை*
இயன்மை	*வியன்மை*

எனப் பல்வகைச் சிறப்புகளை உடையது என்பார்.

தமிழை ஆய்ந்து, ஆழ்ந்து தெளிய சங்கம் கண்டவர் தமிழர். அச்சங்கத்தில் கண்ணுதல் கடவுளே உறுப்பினராகிப் புலவரோடு புலவராக இருந்து தமிழை ஆய்ந்துள்ளார்.

உலகில் உலவும் சில மொழிகளுக்கு இலக்கண வரம்பு இல்லை. ஆனால் நம் தமிழ்மொழி இலக்கண வரம்பிற்குட்பட்ட இலக்கிய வளம் நிறைந்தது.

கண்ணு தற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ?

என்பது திருவிளையாடல் புராணம். வானாகி, மண்ணாகி, வளியாகி, ஒளியாகி, ஊனாகி, உயிராகி, உண்மையுமாய் இன்மையுமாய் விளங்கும் இறைவனுக்கு ஓர் ஆசை, ஆசையே அற்ற ஆண்டவனுக்கும் ஓர் ஆசை. அது என்ன? தானே தமிழ் ஆக வேண்டும் என்பதே அவன் ஆசை.

எனவே, தமிழாகத் தன்னை மாற்றும் தகுதியுடைய ஒருவரை இந்நிலவுலகில் படைத்தான் நன்றாகப் படைத்தான். அவரைக் கொண்டுத் தன்னைத் தமிழாக்கிக் கொண்டு மகிழ்ந்தான். அவர்தான் திருமூலர்

என்னைநன் றாக, இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே

என்பது திரு மூலரின் திருமந்திரம். தமிழாகிய இறைவன் தமிழால் என்னென்ன திருவிளையாடல் களைச் செய்துள்ளான், எப்படியெல்லாம் வளைந்து கொடுத்துள்ளான் என்பதை நம் முன்னோர்கள் எங்கெங்கெல்லாம் பதிவு செய்ய வேண்டுமோ அங்கெல்லாம் பதிவு செய்து வைத்துள்ளனர்.

தமிழ் இலக்கியங்களிலும், பக்தி இலக்கியங்களிலும் ஈடுபாடும் புலமையும் கொண்ட வாழியூர்.வே.இராசவேலன் அவர்கள் இறைவன் தமிழுக்கு இரங்கி வந்துள்ள நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தமிழால் முடியும் என்ற இந்த அருமையான நூலை எழுதி வழங்கியுள்ளார்.

தனிப்பாடல்கள், பெரியபுராணம், தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்ய பிரபந்தங்கள் எனப் பல நூல்களிலிருந்தெல்லாம் நிகழ்வுகளைத் தேர்ந்தெடுத்து அருமையாக அளித்துள்ளார். தமிழாசிரியர் பணியில் பல்லாண்டு ஈடுபட்டு மாணவர்களின் உளவியல் அறிந்து பாடம் நடத்தும் திறமையால் இந்நூல் தெளிவும், வலிவும் பெற்று விளங்குகிறது. விளக்க வேண்டியவைகளை விளக்கியும், விரிக்கவேண்டிய இடத்தில் விரித்தும், சுருக்க வேண்டியவைகளைச் சுருக்கியும் தேவையானவற்றைத் தேவையான அளவு வழங்கியுள்ளது அவரின் பல்லாண்டு கால எழுத்துப் பயிற்சி என்பது நன்றாக விளங்குகிறது. திரு.வே.இராசவேலன் அவர்கள் நல்லாசிரியர், பன்னூலாசிரியர்.

சிறுகதை, நெடுங்கதை, கட்டுரை, கவிதை, நாடகம் எனப் பல்துறைஎழுத்துகளிலும் பட்டறிவு கொண்டவர். எதையும் தெளிவாகப் புரிந்துகொண்டு தெளிவாக எடுத்துச் சொல்வதிலும் எழுதி வழங்குவதிலும் தனித்திறமை கெண்டவர்.

இந்நூலிலும் அவரின் அனுபவ அறிவு ஆன்மீக நூல்களில் கொண்ட நாட்டம், அவற்றைத் தானறிந்தது போல் பிறரும் அறிய வேண்டும் என்ற பெருந்தன்மையாவும் வெளிப்படுகின்றன.

அன்பரின் எழுத்துப் பணி தொடரவும், மேலும் மேலும் பல நூல்களைப் பிறர் பயன் பெறவழங்கும் எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு நீண்ட ஆயுளையும், ஆரோக்கியத்தையும் அருள்வானாக என வேண்டுகிறேன். எழுத்துப் பணியை வாழ்த்தும் வாழியூரார் வாழ்க!



நூலாசிரியர் நுதல்வு

தமிழால் முடியும் என்ற இந்நூல் தங்கள் கைகளில் தவழ்கிறது. திருஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதச் செயல்களை உங்களுக்கு தருவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்நூலுக்கு வாழ்த்துரை, அணிந்துரை, ஆசியுரை வழங்கிய திரு.அக்ரி.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, (கலசபாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்), முனைவர்.புரிசை. ச.நடராசன், மரபுக் கவிஞர் வே.இரா.சிவஞான வள்ளல் ஆகியோருக்கு நன்றி.

இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு தந்த கண்ணமங்கலம் சத்யா ஆப்செட் பிரிண்டர்ஸ் உரிமையாளர் திரு.இரா.அன்பழகன் அவர்களுக்கும், அவருக்கு உறுதுணையாக இருக்கும் அனைத்து பணியாளர்களுக்கும் நன்றி.

இந்நூல் பற்றிய குறை, நிறைகளை எழுதுங்கள் அது எனக்கு ஊட்டச்சத்தாக (விட்டமின்) அமையும்.

மாறாத அன்புடன்
வாழியூர் வே.இராசவேலன்

தமிழால் முடியும்

தமிழால் முடியும்:

தமிழால் முடியாதது ஏதும் இல்லை. ஒருவனை வசைபாடி வீழ்த்த வேண்டுமா? அவனை இசைபாடி எழுப்ப வேண்டுமா? தமிழால் முடியும். ஒருவனை பேசவைக்க வேண்டுமா? பேசுபவனை ஊமையாக்க வேண்டுமா? தமிழால் முடியும்.

கடவுளை நமக்கு ஏவல் செய்ய வைக்க வேண்டுமா? அல்லது நாம் கடவுளின் ஏவலாளாக வேண்டுமா? தமிழால் முடியும்.

ஆபத்தில் இருந்து தப்ப வேண்டுமா? ஒருவனை ஆபத்துக்கு உள்ளாக்கவேண்டுமா? தமிழால் முடியும்.

ஒருவனை வாழ்த்தவும், வீழ்த்தவும் தமிழால் முடியும்.

காளமேகப் புலவர்:

காளமேகப் புலவரை அனைவரும் அறிவோம். அவர் திருவாரூர் கோவிலுக்குச் சென்றார். குருக்கள் சுவாமிக்கு வைரமாலை சார்த்தத் தொடங்கினார். அதனால் இறைவனை தரிசிக்க சற்று நேரம் ஆனது. எனவே அந்த வைரமாலை அற்றுப்போகுமாறு வசைபாடினார் காளமேகப் புலவர்.

உடனே குருக்கள் வேண்டிக்கொள்ள, திரும்ப வசை மீட்சியாக அதே பாடலைப் பாடினார். அந்தப் பாடலைப் பார்ப்போமா!

அன்னவயல் சூழ்ந்திருக்கும் ஆரூரான் நெஞ்சத்தில்
இன்னம் வயிரம் இருக்குமே – முன்னமொரு
தொண்டன்மக னைக்கொன்றும் சோழன்மகனைக் கொன்றும் –
சண்டன் மகனைக் கொன்றுந் தான்.

சிறுத்தொண்டரின் மகனான சீராளனைக் கொன்றபின்னும், மனுநீதிச் சோழன் மகனைக் கொன்றபின்னே சண்டேசுர நாயனாரின் தந்தையைக் கொன்றபின்னரும் திருவாரூரில் வீற்றிருக்கும் சிவபெருமானின் மனத்தில் இன்னும் வைரம் இருக்குமோ? (வைரமாலை இருப்பதா).

குறிப்பு: இருக்குமே என்பதில் வசைப்பொருளில் ஏகாரம் எதிர்மறையிலும், வசை மீட்சியில் அசையாகவும் கொள்ளவேண்டும்.

ஆகையால் தமிழால் முடியாதது எதுவும் இல்லை. தமிழால் நடந்த ஒருசில நிகழ்ச்சிகளை பார்ப்போம்.



நோயி தீர்த்தல்

திருப்பாச்சிலாச்சிரமம்:

இது பாச்சில் கூற்றத்து ஆசிரமம் ஆதலின் பாச்சிலாச்சிரமம் என வழங்கப்படுகிறது. கொள்ளிடத்தின் வடபகுதி. பாச்சில்கூற்றம், வடகரை மழபாடி நாடு, ராஜராஜ வளநாடு என பல பகுதிகளாய் வழங்கப்படுகிறது.

இங்குள்ள நடராஜர் உருவில் முயலகன் உருவம் கிடையாது. அதற்கு பதில் பெரிய பாம்பு உருவம் உள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் "இவரலா தில்லையோ பிரானார்" என இறைவனை இகழந்து பேசி பொருள் பெற்றதலம். பார்வதி பிரம்மன், இலக்குமி, அகத்தியர் முதலானவர்கள் வழிபட்ட தலம். இறைவன் ஒரு வைசியப் பெண்ணை மணந்து கொண்ட தலம்.

இங்குள்ள இறைவனின் பெயர் மாற்றறிவரதர், மணிகண்டீசர், நீலகண்டேசர். இறைவி பாலசுந்தரி. தீர்த்தம் சிலம்பு நதி. அன்னமாம் பொய்கை. பொய்கை அம்பாள் கோவிலுக்கு எதிரில் உள்ளது. இதன் கரையில் தலவிருட்சமான வன்னிமரம் உள்ளது. சிலம்பு நதி ஊருக்கு வடக்கில் ஓடுகிறது. அது பங்குனியாறு, அமலையாறு என்றும் அழைக்கப்படுகிறது.

இத்தலம் திருச்சி–விழுப்புரம் குறுக்குப் பாதையில் உத்தமர் கோயில் புகைவண்டி நிலையத்தில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது.

திருஞானசம்பந்தர் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு காவிரி நதியின் வடகரை வழியே திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்தார். அந்நகரில் கொல்லிமழவன் என்றசிற்றரசன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். அக்கன்னி இளம் மான் போலவும், அழகின் இளங்கொழுந்து போலவும், கண்டால் மயங்கத்தக்க அளவு பேரழகு கொண்டவளாகவும் இருந்தாள். அவ்வளவு அழகு பதுமைக்கு தீராத நோய் ஒன்று இருந்தது. அந்நோய் முயலகன் நோய் என்பதாகும். முயலகன் என்பது கொடிய நோய்களில் ஒன்றாகும். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள் உணர்வற்றுக் கிடப்பர். வலிம்புடன் கிடப்பர். நலிந்துகொண்டே இருப்பர்.

அரசன் பல மருத்துவர்களை அழைத்துவந்து மகளுக்கு வைத்தியம் செய்தான். ஆனாலும் நோய் குணமாகவில்லை. எவ்வளவோ மாந்திரீகர்கள் வந்து முயன்று பார்த்தும் நோய் குணமாகவில்லை. எனவே அரசன் கொல்லிமழவன் மனம் வருந்தினான். மகளை நோயில் இருந்து குணமாக்க முடியும் என்றநம்பிக்கை தகர்ந்துவிட்டது. மகளை அழைத்துக்கொண்டு கோவிலுக்கு சென்றான். பெருமான் எதிரே மகளைக் கிடத்தினான். இனி இறைவன் விட்ட வழியென்று முடிவுக்கு வந்து மகளின் அருகிலேயே அமர்ந்திருந்தான்.

இந்த நேரத்தில் திருஞானசம்பந்தர் திருப்பாச்சிலாச்சிரமத்திற்கு வருவதாக அறிந்தான். சம்பந்தர் அவ்வூரை நெருங்கிவிட்டதை அறிந்து தன் மகளை விட்டெழுந்து நகரை நன்கு அலங்கரித்தான். திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு அழைக்கச் சென்றான். "பிள்ளையார் எழுந்தருளப் பெற்றேன்" என்று ஆனந்தக் கண்ணீர் பெருக்கினான். முத்துச் சிவிகையின் முன்னே விழுந்து வணங்கினான். அவ்வாறு விழுந்து வணங்கியவனைக் கண்ட சம்பந்தர் "எழுக" என்றார். கொல்லிமழவன் எழுந்து இரு கைகளையும் தலைக்குமேல் கூப்பியவண்ணம் முன்னே சென்றான். சம்பந்தர் அரசனைப் பின்தொடர்ந்தார். அரசன் அவரை ஊருக்குள் அழைத்துச் சென்றான். சம்பந்தர் ஊரின் அழகிய வீதிகளைக் கடந்து திருக்கோயிலை அடைந்தார்.

இறைவனை வணங்க கோவிலுக்குள் சென்றார். அங்கு கன்னிஇளம் பெண்ணொருத்தி இறைவனின் எதிரே வீழ்ந்து கிடக்கக் கண்டார். அவளுக்கு உணர்வில்லை. அப்பெண்ணை ஞானப்பால் உண்டவர் கண்டார். "இது என்ன?" என்று அங்கிருந்தவர்களைக் கேட்டார். கொல்லிமழவன் முன்னே வந்து, "இவள் அடியேன் பெற்றமகள். இவளுக்கு முயலகன் என்றநோய் தாக்கியுள்ளது. எவ்வளவோ மருத்துவமும், மாந்திரீகமும் பார்த்துவிட்டேன். ஒன்றுக்கும் இந்நோய் அசைந்து கொடுக்கவில்லை.

ஆகையால் இறைவனே கதியென சிவபெருமானின் முன்னே கிடத்தியுள்ளேன். இனி இறைவன் விட்டவழி" என்றான்.

அதனைக் கேட்ட ஆளுடைப்பிள்ளையார் அவனுக்காகவும், அப்பெண்ணுக்காகவும் மிகவும் வருந்தினார். அரசன் துயரத்தைப் போக்க திருவுளம் கொண்டார். சிவபெருமானை நோக்கி அழகிய தமிழ்ப் பாடலால் துதித்தார்.

துணிவளர் திங்கள் துலங்கி விளங்கச்
சுடரிச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொங்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலி தேர்வார்
அணிவளர் கோலம் எலாம்செய்து பாச்சில்
ஆச்சிரா மத்துஉறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோஇவர் மாண்பே. (1-44-1)

இவ்வாறு தொடங்கும் பதிகத்தைப் பாடினார். தமிழுக்குத் தலைவணங்காதவர் யார் இருக்க முடியும்! அது இறைவனாயினும் சரி, இல்லாதவனாயினும் சரி. உடனே கொல்லிமழவனுடைய கன்னியிளம் பெண்ணின் நோய் தீர்ந்தது.

தரையில் உணர்வின்றி வீழ்ந்து கிடந்த அப்பெண் எழுந்தாள். உணர்வுடன் நடந்து வந்து தந்தையின் அருகே நின்றாள். அதைக்கண்ட அரசன் மனம் மகிழ்ந்தான். இருவரும் திருஞானசம்பந்தர் கால்களில் விழுந்து வணங்கினர்.

ஆவுடைப்பிள்ளையார் அவர்களுக்கு அருள் செய்தார். திருப்பாச்சிலாச்சிரமத்திலேயே சிலகாலம் தங்கினார். பிறகு அங்கிருந்து திருப்பைஞ்லி, திருஈங்கோய்மலை முதலிய திருப்பதிகளை வணங்கி பாமாலைகள் பாடிச்சென்றார்.

பொற்கிழி பெறுதல்

திருஞானசம்பந்தர் பல்வேறு திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறைக்கு வந்தார்.

திருஆவடுதுறை:

இது நரசிங்கன்பேட்டை இரயில் நிலையத்திற்கு தென்கிழக்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இது காவிரித் தென்கரைத் தலங்களுள் முப்பத்தாறாவது ஆகும். இத்தலத்து இறைவனின் திருப்பெயர் மாசிலாமணியீசரர், அணைத்தெழுந்த நாயகன் என்பதாகும். இத்தலத்தில் இறைவன் உமாமகேசுவரியை அணைத்தெழுந்த கோலமாக இருப்பார். திருவிழாவின் முடிவில் கோமுத்தி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுப்பவர் இவரே! இவரது நடனம் சுந்தர நடனமாகும். திருவிழாக் காலத்தல் திருத்தேரில் எழுந்தருள்பவர்.

இத்தல இறைவியின் திருப்பெயர் ஒப்பிலாமுலையம்மை என்பதாகும். இத்தலத்தின் தீர்த்தங்கள் கோமுத்தி தீர்த்தம், பத்மதீர்த்தம், கைவல்ய தீர்த்தம் ஆகியவையாகும். இத்தல விருட்சம் அரசு ஆகும். இது படர்ந்து விளங்குவதால் படர்ந்த அரசு எனப்படுகிறது. இத்தலத்தின் சபை போதி அம்பலம் என்பதாகும். இத்தல நந்தி கருமநந்திதேவர் ஆவார். இத்தலத்திற்கு கோமுத்தி, கோகழி, நவகோடிசித்தபுரம் என்ற பெயர்களும் உண்டு.

தருமதேவதையை இடபவாகனமாகக் கொண்டதன்றி, தரும தேவதையை அரசமரத்தின் நிழலில் கோயில் கொண்டு இருக்கும்படி அருளியது, திருமூலரை தடுத்தாட்கொண்டு ஆகம சாரமாகிய திருமந்திரத்தை வெளிப்படுத்த திருவருள் புரிந்தது, போகர் முதலிய சித்தர்களுக்கு அஷ்டமாசித்தியை அருளியது முதலியன இத்தல இறைவனின் சிறப்புகளாகும். சுந்தரர் தன் உடற்பிணி தீருமாறு வேண்டிக்கொண்ட தலம். திருமாலிகைத் தேவர் பல்வேறு அற்புதங்களை நிறைவேற்றிய தலம். சேரமான் பெருமான் வழிபட்ட தலம். முசுகுந்தனுக்கு மகப்பேறு அருள் செய்து இத்தலத்தை திருவாரூராகவும், தம்மைத் தியாகேசுவராகவும் காட்டிய தலம்.

சீகாழிப்பிள்ளையார் திருவாவடுதுறைக்கு வந்த பின்னர் காழிப்பிள்ளையின் தந்தை தன் மகனிடம் “வேத வேள்விகள் செய்யவேண்டும்” என்றும், அதற்கு பொருள் வேண்டும் என்றும் கேட்டார். சிவகாரியங்களைச் செய்ய பழக்கப்பட்டு விட்டால் அதை விடமுடியாது அல்லவா? சிவபாத இருதயரும் வேள்விகள் செய்து பழக்கப்பட்டவர். அந்தப் பழக்கத்தை விடமுடியவில்லை.

எங்கள் ஊரில் அன்பர் ஒருவர் ஒவ்வொரு வருடமும் ஐயப்பன் கோவிலுக்குச் செல்வார். வருடா வருடம் கோவிலுக்குச் செல்லும் நாள் நெருங்கிவிட்டால் அவரால் சும்மா இருக்க முடியாது.

கையில் பணம் இல்லையென்றாலும் கூட கடனாவது வாங்கிக் கொண்டு ஐயப்பன் கோவிலுக்குச் செல்வார். தள்ளாத வயதிலும் அப்பழக்கத்தை அவரால் நிறுத்த முடியவில்லை. ஏனென்றால் அந்தப் பழக்கத்தால் ஆட்கொண்டவர்களால் சும்மா இருக்க இயலாது. நல்ல பழக்கம்தானே!

தந்தையர் பொருள் கேட்டதும் ஞானசம்பந்தருக்கு வருத்தம் ஏற்பட்டது. முதல் காரணம் அப்பொழுது அவரிடம் பணம் இல்லை. இரண்டாவது காரணம் இறைவன் திருப்புகழையே பாடிக்கொண்டிருந்த அவர் தந்தையைக் கவனிக்கவில்லை! உடனே திருஞானசம்பந்தர் திருவாவடுதுறைஇறைவனிடம் சென்றார். உள்ளம் உருக கீழ்கண்ட பாடலைப் பாடினார்.

இடரினும் தளரினும் எனதுளநோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமைஆளுமாறு ஈவதொன்று எமக்கில்லையேல்
அதுவோ உனதின்அருள் ஆவடுதுறைஅரனே (3-4-1)

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உன்கழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமைஆளுமாறு ஈவதுஒன்று எமக்கில்லையே
அதுவோ உனதின்அருள் ஆவடுதுறைஅரனே (3-4-2)

அலைபுனல் ஆவடுதுறைஅமர்ந்த
இலைநுனை வேற்படை எம்இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினைஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்ஏறுவார் நிலமிசை நிலையீரே (3-4-11)

என்று பதிகம் பாடி முடித்ததும், இறைவனைச் சூழ்ந்து நிற்கின்ற பூதங்களில் ஒன்று உலவாக்கிழியைக் கொண்டுவந்து பலிபீடத்தின் மீது வைத்தது. அப்பூதம் "இறைவன் இதனை உங்களுக்குத் தரச்சொன்னார்" என்றதுடன் "இதில் உள்ள பொருள் எடுக்க எடுக்க குறையாது" என்றும் கூறியது. சம்பந்தர் பணமுடிப்பை எடுத்து தந்தையிடம் கொடுத்தார். "நீங்கள் செய்ய வேண்டிய வேள்விக்கு மட்டுமன்றி சீர்காழியில் இருக்கின்றஅத்தனை அந்தணர்களும் செய்கின்றவேள்விக்கு வேண்டிய பணத்தை இதிலிருந்து எடுத்துக்கொடுங்கள்" என்றார்.

பின்னர் இங்கு வந்த அப்பர், இறைவனைப் பார்த்து ''இறைவனே, உலகமெலாம் உன் திருவடிகளையே வணங்குகிறது. ஏன் தெரியுமா? நீ எண்ணியதை எண்ணியவாறேகொடுக்கின்றாய். ஆகவே இந்த உலகம் நலம் பெறுகின்றது. உன்னையே வணங்குகிறது.

அவர்களுக்கு நலம் அருள வேண்டும் என்பதற்காக கங்கையை தலையில் வைத்திருக்கின்றாய். உன்னை வணங்குபவர்களுக்கும், உன்னை நம்பி வந்தவர்களுக்கும் அருள் புரிகிறாய். காழியெம் பெருமானுக்கு நீ ஆயிரம் பொன் கொடுத்ததைப் பார்த்து இங்குள்ள வேங்கை மரங்களும் தங்களிடத்துள்ள மலர்களைக் கொட்டிக் கொண்டிருக்கின்றன" என்ற பொருள்படும் கீழ்கண்ட பாடலை பாடினார்.

மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும்போதும்

பாயிருங் கங்கையினைப் படர்சடை வைப்பார்போலும்

காயிரும் பொழில்கள்சூழ்ந்த கழுமலஆரர்க்கு ஐம்பொன்

ஆயிரம் கொடுப்பர்போலும் ஆவடு துறையனாரே (4-50-1)

திருஞானசம்பந்தர் ஆயிரம் பொன் பொற்கிழி பெற்ற அற்புதத்தைச் சேக்கிழார்

நச்சி இன்தமிழ் பாடிய ஞான சம்பந்தர்

இச்சையே புரிந்து அருளிய இறைவர் இன்னருளால்

அச்சி றப்பொருள் பூதருள் விரைந்தநல் பீடத்து

உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரக்கிழி ஒன்று

(திருஞானசம்பந்தர் புராணப் பாடல் 426)

இவ்வாறு ஞானசம்பந்தருக்கு இறைவன் பொன் கொடுத்ததை உண்மையென அப்பரும், சேக்கிழாரும் உறுதி செய்கின்றனர். இது எதானல் முடிந்தது. தமிழால் முடிந்தது என்பதை மறுக்க இயலுமோ?

நச்சு நீக்கியது

வைப்பூர்:

இத்தலம் திருமருகலின் தென்மேற்கில் உள்ளது. புத்தாறு, வனப்பாறுகளைத் தாண்டி மருகலில் இருந்து சுமார் 60 கி.மீ தொலைவில் உள்ளது.

தாமன் செட்டியார்:

வைப்பூரில் தாமன் என்ற வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பெண்மக்கள் ஏழு பேர். அவர்களில் மூத்தவளைத் தன் மைத்துனன் மகனுக்கு கொடுப்பதாகக் கூறிக்கொண்டிருந்தான். ஆனால் அவ்வாறு சொன்னபடி மூத்தவளை மைத்துனன் மகனுக்குத் தரவில்லை. பெரும்பொருள் பெற்றுக் கொண்டு அவளை வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்து விட்டான். அடுத்த ஐந்து பெண்களையும் வேறு வேறு பிள்ளைகள் தேர்ந்தெடுத்து திருமணம் செய்தான்.

வாய்மையைக் காப்பாற்றியவள்:

வாய்மையைக் காப்பாற்றஅரிச்சந்திரன் நாட்டைத் துறந்தான். இராமன் காடு சென்றான். தன் தந்தையின் செயல் கடைசிப் பெண்ணுக்குப் பிடிக்கவில்லை. தந்தை சொன்ன சொல்லை எப்படியும் காப்பாற்றவேண்டும் என்று நினைத்தாள். தன்னையும் தன்தந்தை அயலானுக்கே கொடுத்து விடுவாரோ என்று நினைத்துப் பயந்தாள்.

தந்தை முதலில் சொல்லிய வாய்மையைக் காப்பாற்ற முடிவெடுத்தாள். தனக்குக் கெட்டபெயர் வந்தாலும் வரட்டும் தன்னை யார் என்ன சொன்னாலும் சொல்லட்டும் தந்தையின் வாய்மை நிலைக்க வேண்டும் என நினைத்தாள்.

அதற்காக வீட்டைத் துறக்க எண்ணினாள். தன் மாமனை அழைத்துக் கொண்டு செல்லத் திட்டமிட்டாள். “அவரை அழைத்துக் கொண்டு வெளியூர் சென்று மணந்து கொள்வேன்'' என்று முடிவெடுத்தாள். அவனை அழைத்துக் கொண்டு புறப்பட்டுச் சென்றாள். இருவரும் மதுரையை நோக்கிச் சென்றனர். செல்லும் போது பகல் கழிந்து இரவு வந்துவிட்டது. இரவில் மேலும் போக முடியாது என முடிவெடுத்தனர். அவர்கள் அப்பொழுது வந்த இடம் திருமருகல் ஆகும். அருகில் இருந்த மடத்தில் தங்கினர்.

திருமருகல்:

இத்தலம் திருவாரூர்–மயிலாடுதுறைசாலையில் நன்னிலத்திற்குக் கிழக்கே சுமார் எட்டு கி.மீ தொலைவில் உள்ளது. மருகல் என்பது வாழை வகைகளில் ஒன்று. இங்கு அவ்வகை வாழை மரங்கள் அதிகம் இருந்ததால் மருகல் என்று பெயர் வந்தது. இஃதொரு மாடக் கோயிலாகக் காணப்படுகிறது. இத்தலப் பதிகங்களில் ஆன்மீகமும், அருட்செயல்களும் வெளிப்படக் காணலாம்.

சம்பந்தர் வருகை:

திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளிய ஈசனின் திருக்கோலத்தை இங்கு திருஞானசம்பந்தருக்கு சிவபிரான் காட்டினார். சுவாமியின் பெயர் மாணிக்கவண்ணர். அம்மையின் பெயர் வண்டுவார்குழலி. தலவிருட்சம் வாழை. திருஞானசம்பந்தர் சிவத்தலங்கள் பலவற்றையும் வணங்கிக் கொண்டு, பதிகம் பாடி வந்தார். திருக்கீழ்வேளூர் தலத்தில் சிவனை வணங்கினார். பதிகம் பாடியபின் பல தலங்களைத் தரிசிக்க எண்ணினார்.

சம்பந்தர் வருவதை செங்காட்டங்குடியில் இருந்த சிறுத்தொண்ட நாயனார் அறிந்தார். அவரை எதிர்கொண்டு வரவேற்றார். திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளினார். நாயனாரை மிகவும் விரும்பி வணங்கினார். நாயனார் எல்லா சுகபோகங்களையும் வெறுத்தவர். பற்றற்றவரை பாமரரும் விரும்புவர் எனும் போது பார்வதியின் பால் குடித்தவர் சிறுத்தொண்டரை விரும்பாமல் போவாரா?

பட்டினத்தார்:

பட்டினத்தார் அனைத்தையும் துறந்தார். வீடு, வாசல், மனைவி என அனைத்தையும் துறந்தார். உண்பதற்கென்று கையில் எவ்விதப் பொருளும் வைத்துக் கொள்ளவில்லை. யாராவது பிச்சையிட்டால் கைகளிலே வாங்கிக் கொள்வார்.

அப்படிப்பட்ட துறவியை அவ்வூர் அரசன் வரும்படி அழைத்தான். அவர் போகவில்லை. அரசனுக்கோ சினம் அதிகரித்தது. தன் படை, பரிவாரங்களுடன் பட்டினத்தார் இருக்குமிடம் வந்தான். அப்பொழுது கோயிலிலே பட்டினத்தார் அமர்ந்து கொண்டு இருந்தார்.

வந்த அரசன் "நான் இவ்வூர் அரசன், நான் அழைத்து நீர் வரவில்லை! ஏன்?" என்றான். "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்றார் பட்டினத்தார். "இதனால் நீ என்ன சுகம் கண்டாய்" என்றான் அரசன். பட்டினத்தார் அமைதியாக "நீ நிற்க, நான் அமர" என்றார். அரசனுக்கு அப்போதுதான் ஞானம் பிறந்தது. அங்கேயே, அப்பொழுதே எல்லாவற்றையும் துறந்தான். பட்டினத்தாரின் சீடன் ஆனான். ஆகவே துறவியை அனைவரும் விரும்புவர்.

கணபதீச்சரம் அடைதல்:

திருஞானசம்பந்தர் சிவனடியார்களுடன் கூடிச் சென்று கணபதீச்சரம் அடைந்தார். அக்கோயிலை வலம் வந்து, கோயிலின் உள்ளே நுழைந்து "பைங்கோட்டு மலர்ப்புன்னை" என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். அதில் "செங்காட்டங்குடியில் விளங்கும் சிறுத்தொண்டர் பணிசெய்ய மயானத்தில் நின்று கையில் அனலை ஏந்தி நடம் புரிபவரே" என்றும், "உறுதியான தோள் அழகு பொருந்திய சிறுத்தொண்டர்" என்றும்,

"சிறப்பின் புகழ் எக்காலத்திலும் குறையாத சிறுத்தொண்டர்" எனவும், "சீரின் புகழ் சிறுத்தொண்டர்" எனவும், "திருநீறு அணிந்த திருமார்பினராகிய திருத்தொண்டர்" என்றும் சிறுத் தொண்டரை சிறப்பித்துப் பாடினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் திருமருகல் வந்தார்.

சம்பந்தரின் திருமருகல் வழிபாடு:

காலை நேரம், சம்பந்தர் நீராடி வழிபாட்டை முடிக்கத் திருக்கோயிலுக்குச் சென்றார். உள்ளே நுழையும் முன் அவருக்கு அவலக் குரல் ஒன்று கேட்டது. அவர் செல்வது திருக்கோயிலுக்கு. இறைவனை வழிபடச் செல்கிறார். நேரமோ அதிகாலை. நாமாக இருந்தால் அவலக்குரலைக் கண்டுகொள்ள மாட்டோம். "யாராவது எக்கேடாவது கெட்டுப் போகட்டும்" என எண்ணி நம் வேலையைக் கவனிப்போம். ஆனால் சம்பந்தர்! அவர்தான் மானிடத்தை வாழ்விக்க வந்த அருளாளர் ஆயிற்றே! மும் மலங்களையும் நம்மிடமிருந்து நீக்க வந்த தயாபரன் ஆயிற்றே! அப்படி இருப்பாரா!

திருக்கோயிலுக்குச் செல்வதை விடுத்து அவலக் குரல் வந்த திசை நோக்கிச் சென்றார். திருக்கோயிலில் இறைவனை வணங்குவதைவிட, ஏங்கியவர்களின், ஏழைகளின் குறை தீர்ப்பதுதானே தீர்க்கதரிசிகளின் வேலை!

அதனால்தானே "தொண்டர்" எனும் சிறப்பு எய்தினார். சம்பந்தர் அழுகுரல் வந்த திசை நோக்கிச் சென்றார். அங்கே ஒரு ஆடவன் விழுந்து கிடந்தான். ஒரு பெண் அழுது கொண்டிருந்தாள். இவரைப் பார்த்ததும் அப்பெண் ஓடிவந்து இவர் காலில் விழுந்தாள். ஞானப்பால் உண்டவர் "என்னம்மா? என்ன நடந்தது" என்றார்.

அப்பெண் தன் வரலாற்றைக் கூறினாள். "பெருமானே, அவர் என் மாமன் மகன். இருவரும் நேசம் உற்றவர்கள். என் தந்தை என்னை இவருக்கு மணம் முடிக்க மறுத்ததால் ஊர் எல்லை தாண்டி இருவரும் வந்தோம். இங்கு வந்து மடத்தில் தங்கியிருந்தபோது இரவு பாம்பு ஒன்று இவரைத் தீண்டிவிட்டது. பெருமானே, நான் மிகுந்த பாவியாகிவிட்டேன்" என்றாள். அவள் கதையைக் கேட்டதும் சம்பந்தர் துணுக்குற்றார். இவள் திருமணம் ஆகாதவள் என்பதால் அவளால் இவன் உடலைத் தீண்டி அழக்கூட முடியவில்லை. நம்முடைய பண்பாடு அப்படி! திருஞானசம்பந்தர் இறைவனை நோக்கி,

சடையாயெனு மால்சர ணீயெனுமால்
விடையாயெனு மால்வெரு வாவிழுமால்
மடையார்குவ ளைமல ரும்மருகல்
உடையாய்தகு மோவிவ ளுன்மெலிவே (2-18-1)

என்று தொடங்கும் அற்புதப் பாடலைப் பாடினார்.

அந்த வணிகன் மகனை உயிர்ப்பித்து அவர்கள் இருவருக்கும் மணத்தை முடித்து வைத்தார். இது தமிழால்தானே முடிந்தது.

அக்கன்னியும் அக்காளையும் சம்பந்தர் காலில் விழுந்து வணங்கினர். சம்பந்தர் அவர்களுக்கு ஆசிகூறி அனுப்பிவிட்டு சிலகாலம் அங்கேயே தங்கியிருந்தார். இவ்வாறு அப்பெண்ணும், அவ்வணிகனும் இறைவனிடத்தில் அன்பு செலுத்தி அவருடைய அருளுக்கும் ஆளாயினர்.

இவ்வரலாற்றுச் சிற்பம் இத்திருக்கோயிலின் மேற்கு கோபுர வாசல் கோபுரத்தில் அழகுடன் விளங்கக் காணலாம். உண்மையான காதல் அடியவர் ஆசியையும், அருளையும் பெறும் என்பதற்கு “சடையாயெனுமால்” என்னும் தமிழ்த் திருப்பதிகம் சான்று.

பசியை நீக்கக் காசு பெறுதல்

திருஞானசம்பந்தர் திருமருகலில் இருந்து புறப்பட்டு மேலும் பல தலங்களுக்குச் சென்றார். அப்பரும், ஞானசம்பந்தரும் மீண்டும் ஒருவரை ஒருவர் சந்திக்கின்றார்கள். இருவரும் சேர்ந்து திருவீழிமிழலை என்னும் தலத்திற்குச் சென்றார்கள்.

திருவீழிமிழலை:

காத்தியாயன மகரிஷியின் யாகத்தில் தோன்றிய உமாதேவியாரை திருமணம் செய்து கொண்டு இறைவன் என்றும் மணக்கோலத்துடன் இருக்கும் தலம் இதுவாகும். திருமால், சக்கரம் பெறும் பொருட்டு நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு அர்ச்சிக்க, ஒரு நாள் ஒரு மலர் குறைய, அதற்கு பதிலாக தாமரை மலரைப் போன்ற தம்முடைய ஒரு கண்ணைப் பறித்து அர்ச்சித்தார். பின்னர் சக்கரம் பெற்றதலம் இதுவாகும். நாவுக்கரசரும், சம்பந்தரும் சேர்ந்து இறைவனிடம் படிக்காசு பெற்று நாட்டின் பஞ்சத்தைப் போக்கிய தலம் இதுவாகும்.

காவிரித் தென்தலங்கள் 127–ல் இது 61–வது திருத்தலம் ஆகும். மூவரால் பாடல் பெற்றதிருத்தலமாகும். இத்தலத்தின் வேறு பெயர்கள் பூலோகவாசம், கல்யாணபுரம், பஞ்சாக்கரபுரம், தட்சணகாசி, சம்மங்கலதலம், சுவேதகாவனம் ஆகாசநகரம், வனசாரண்யம், நேத்திரார்ப்பனபுரம் தேஜிநீவனம் என்பனவாகும்.

இரதிதேவி, வசிஷ்டர், காமதேனு, மனு முதலானவர்கள் பூஜித்து பேறு பெற்றது. மிழலை ஊர்ப் பெயராகும். வீழி ஒரு செடியின் பெயர். சுவாமி உமையம்மையை திருமணம் செய்துகொண்ட தலம். திருஞானசம்பந்தருக்கு சீர்காழியில் உள்ள திருக்கோலத்தைக் காட்டிய தலம். இறைவனால் படியளக்கப்பெற்றகாசுகளைக் கொண்டு பொருட்களை வாங்கிய கடைத்தெரு அய்யன்பேட்டை என வழங்கப்படுகிறது. அங்கு வீற்றிருக்கும் சுவாமி செட்டியப்பர் எனவும், அம்பிகை படியளர் நாயகி எனவும் வழங்கப்படுகின்றனர்.

இத்தலத்தின் இறைவனின் பெயர் நேத்திரார்ப்பணேசர் எனவும், விழியழகர் எனவும் வழங்கப்படுகிறார். அம்மையார் சுந்தரகுசாம்பிகை. தலவிருட்சம் வீழிச்செடி ஆகும். தீர்த்தம் விஷ்னு தீர்த்தம் ஆகும்.

பஞ்சம்:

சம்பந்தரும், நாவுக்கரசரும் அத்தலத்தில் இருந்தபோது வானம் பொய்த்தது. உலகத்தில் மழை குறைந்தது. நதிகளும் தவறி மண்வளம் சுருங்கியது. உணவு தடைப்பட்டு எங்கும் பஞ்சம் பரவலாயிற்று. எல்லா உயிர்களும் வருந்தின.

அந்தப் பஞ்சம் மக்களை மட்டுமல்ல சிவனடியார்களையும் விட்டுவைக்கவில்லை. பசிக்கொடுமை எங்கும் பரவியது. பசி வந்துவிட்டால் பத்தும் பறந்துவிடும் அல்லவா? விண்ணவர்களும் பூஜையை இழந்தனர்.

வானாகி, மண்ணாகி, அனலுமாகி, மாருதமாய் இருசுடராய், நீருமாகி, உயிராகி, உணர்வுமாகி உலகங்கள் அனைத்தும் ஆகி, உலகுக்கு அப்பால் ஆனாத வடிவமாகி நின்றசிவபெருமான் திருவடிகளை தியானித்து அன்றிரவு அவர்கள் இருவரும் துயில் கொண்டார்கள். அவர்களின் கனவில் இறைவன் தோன்றி "அளவில்லாத புகழ் உடையவர்களே! இந்தப் பசிநோய் உலகத்தின் இயல்பால் நிகழ்ந்தது. உங்களை சிறிதும் பாதிக்காது. உங்களைச் சார்ந்திருக்கும் அடியார்களின் வாட்டத்தைப் போக்கும் பொருட்டு நாள்தோறும் நம் ஆலயத்தின் கிழக்குப் பீடத்திலும், மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு பொற்காசு வைத்து வழங்கி வருவோம். பஞ்சகாலம் ஒழிந்ததும் அங்கு காசு வைப்பது நிறுத்தப்படும்" என்று கூறி மறைந்தார்.

இருவரும் விழித்து எழுந்தனர். திருக்கோயிலை அடைந்தார்கள். இறைவன் கனவில் கூறியபடி காசு இருக்கக் கண்டார்கள். அக்காசுகளை எடுத்துக்கொண்டு நாளும் அடியார்களுக்கு விருந்து அளித்தனர்.

இவ்வாறு தினமும் நடந்து வரும் பொழுது திருநாவுக்கரசரது மடத்தில் அடியார்கள் உச்சிப் பொழுதிற்குள் திருவமுது உண்டு களித்தனர். சம்பந்தர் மடத்தில் சிறிது நேரம் கழித்துதான் உணவு சமைத்து வழங்கமுடிந்தது. சம்பந்தர் தன்னுடைய மடத்தில் உணவு சமைப்பவர்களை நோக்கி "இது ஏன்" எனக் கேட்டார். அதற்கு அவர்கள் ''சிவபெருமானின் காசை எடுத்துக்கொண்டு தங்கள் காசுக்கு வட்டம் கேட்கிறார்கள். ஆனால் நாவுக்கரசர் காசுக்கு வட்டம் கேட்பதில்லை" என்றனர். நாவுக்கரசர் காசு வாசியில்லாத காசு. இதனால் நாமும் இறைவனிடம் வாசியில்லாத காசு கேட்போம் என நினைத்து இறைவனை நோக்கி

வாசி தீரவே காசு நல்குவீர்

மாசின் மிழலையீர், ஏச வில்லையேல்

இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்

கறைகொள் காசின் முறைமை நல்குமே (1-92-12)

எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். இறைவனும் இத்தகைய தமிழ்பாடலைக் கேட்டவுடன் சம்பந்தருக்கும் நல்ல காசு வழங்கினார். சம்பந்தரும் இறைவன் அருளால் நல்லகாசு பெற்றார். சமையல் வேலைகளும் குறிப்பிட்ட நேரத்தில் நடந்தது. அடியார்களும் குறிப்பிட்ட நேரத்தில் உண்டு மகிழ்ந்தனர்.

சம்பந்தருக்கு இறைவன் ஏன் தனக்குமட்டும் வாசி தீராக் காசைக் கொடுத்தான் என்பது புரியவில்லை. அப்பர் பெருமானின் சிறப்பை திருஞானசம்பந்தருக்கு உணர்த்தவே இறைவன் அவருக்கு வாசிதீர்ந்த காசைத் தருகின்றான். அப்பரது பெருமையை சம்பந்தருக்கு மட்டுமல்லாமல் உலகத்தவர்களுக்கும் உணர்த்தவே இத்திருவிளையாடலைப் புரிந்தான் எனக் கருத இடமிருக்கிறது.

நாவுக்கரசர், இறைவனைப் பாடுவதோடு மட்டுமல்லாமல் அவருக்கு தொண்டு புரிந்தும் வந்ததால் அவருக்கு நல்லகாசு கொடுத்தாராம். சம்பந்தர் இறைவனைப் போற்றிப் பாடுவதோடு நிறுத்திக் கொள்வதால் அவருக்கு வாசிதீராக் காசைக் கொடுத்தான் இறைவன் என ஒரு சில அறிஞர் பெருமக்கள் சொல்கின்றனர்.

ஞானசம்பந்தர் அப்பரோடு இணைந்து பசி தீர்க்கும் பணியைச் செய்திருக்கவேண்டும். ஏனெனில் அப்பர்தானே வயதில் பெரியவர். சம்பந்தர் சிறுபிள்ளை. அவர் அப்பரைத் தனியே பணிசெய்ய விட்டது தவறல்லவா? வயதானவர் என்ன செய்வார் பாவம். சம்பந்தரின் இச்செயல் சரியில்லை என்பது இறைவன் தீர்ப்பு. இதனை சம்பந்தருக்கு உணர்த்தவே இறைவன் இவ்வாறு செய்தான் என்பது ஒருசிலர் வாதம்.

அதுசரி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காசு கொடுக்க வேண்டுமா? ஏன் மொத்தமாகக் கொடுக்கக் கூடாதா? என்ற ஐயம் சிலருக்கு எழலாம். ஞானிகள் தங்களிடம் பணம் சேர்ந்தால் அதை வைத்திருக்க மாட்டார்கள். எங்கேயாவது வீசி எறிவார்கள். இல்லையெனில் யாருக்காவது கொடுத்துவிடுவார்கள். ஏனெனில் ஞானிகளுக்கு பணத்தின்மீது பற்று கிடையாது. எனவேதான் இறைவன் தினமும் ஒவ்வொரு காசாக கொடுக்கிறான்.

இதைத்தான் வள்ளலார் "பணத்திலே சிறிதும் ஆசையில்லை, அப்பணங்களை பலகால் கிணற்றிலே எறிந்தேன். குளத்திலும் எறிந்தேன். கேணியில் எறிந்தேன்" என்பார் (3396).

பட்டினத்தாரை அனைவருக்கும் தெரியும். அவர் தனக்கென எதையும் வைத்துக் கொள்ளாதவர். முற்றும் துறந்த முனிவர். பிச்சையெடுத்து உண்ணக்கூட பாத்திரம் வைத்திருக்காதவர். பசியெடுத்தால் ஏதாவது ஒரு வீட்டின் முன் நிற்பார். அந்தவீட்டு அம்மாள் சாதத்தை எடுத்து வருவார். அடியார் கைகளை நீட்டுவார். அக்கைகளில் சோறு வைக்கப்படும். அதனை அப்படியே உண்டுவிட்டு தொடையில் கட்டியிக்கும் துண்டில் கைகளைத் துடைத்துக் கொண்டு போய்விடுவார்.

மேல்நாட்டு ஞானிகள் இருவர் கடற்கரையில் நடந்து சென்றனர். கணவன்–மனைவி அவர்கள். கணவன் முன்னே சென்றான். மனைவி அவனைப் பின்தொடர்ந்தாள். அந்த ஆண் அடியார்க்கு முன்னே வழியில் ஒரு தங்கச்சங்கிலி கிடத்தது. உடனே அவர் அதை கால்களால் மண்ணைத் தள்ளி மறைத்தார். உடனே மனைவி அவரிடம் “என்ன அது” எனக்கேட்டாள். “எதுவும் இல்லை” என்றான் கணவன்.

“ஆண்டவன் மீது ஆணை! சொல்லித்தான் ஆகவேண்டும்'' என்றாள் மனைவி. கணவன் உண்மையைக் கூறினான். மனைவிக்கு கோபம் வந்து விட்டது. “பொன்னுக்கும், மண்ணுக்கும் வித்தியாசம் அறியும் நீர், உண்மையான துறவியில்லை. இனி உன்னுடன் சேர்ந்து இருக்க முடியாது” என்று கூறிவிட்டு போய்விட்டாள். இதுவல்லவோ பற்றற்றதன்மை. நகையின் மீதும், பணத்தின் மீதும் ஆசை வைக்காத தன்மை!

பணத்தின்மீது ஆசைவந்து விடும், அல்லது கிடைத்த பணத்தை வீசி எறிந்துவிடுவார்கள் என்பதனால்தான் இறைவன் நாவுக்கரசருக்கும், ஞானசம்பந்தருக்கும் ஒவ்வொரு காசாக கொடுத்தான் போலும்.

பசிப்பிணியைப் போக்கவேண்டும் என்று அப்பருக்கும், சம்பந்தருக்கும் தோன்றியது. இந்நிகழ்ச்சியின் விளைவுதான் பல்லாண்டுகளுக்குப் பின்வந்த வள்ளலாருக்கும் இதே எண்ணம் மனதில் துளிர்விட்டது. எனவேதான் வள்ளலார் ஒரு தருமச்சாலையை ஏற்படுத்தினார். அடியார்களுக்கு அன்னமிட்டு அருளினார். வடலூரில் இன்றும் நெருப்பு அணையாத அடுப்பு உள்ளதாகக் கூறுகின்றனர். இன்றும் அடியார்களுக்கு அமுது படைக்கப்படுகிறது.

இவ்வாறு வாசில்லாத காசினைப் பெறச்செய்தது எது? இறைவன் மீது அடியார்கள் பாடிய தமிழ்ப் பதிகமன்றோ! இது தமிழால்தானே முடிந்தது. ஆகவே தமிழால் முடியாதது ஒன்றுமில்லை என்பதை உணரலாம்.

கதவு திறந்து மூடுதல்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் சிறிதுநாள் திருவீழிமழிலையில் தங்கியிருந்தனர். மழைபெய்தது. பஞ்சம் நீங்கியது. இருவரும் புறப்பட்டு திவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பேருவேளூர், திருச்சாத்தான்குடி, திக்கரசீரம், திருவிளமா, திருவாரூர், திருக்காடுவில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருகிளகச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருமதிவேண்டுறை, திருத்தண்டலை, நீலோநி, திருக்களர் முதலான திருப்பதிகளுக்குச் சென்று இறைவனை வழிபட்டு திருப்பதிகங்கள் பாடினர். பின்னர் இருவரும் திருமறைக்காட்டை அடைந்தனர். திருமறைக்காட்டை அடைந்த அடியார்கள் இருவரும் கோவிலுக்குச் சென்றனர். அங்கோ கோயில் மூடப்பட்டு இருந்தது.

திருமறைக்காடு:

இத்தலம் இன்று வேதாரண்யம் என அழைக்கப்படுகிறது. வேதங்கள் வழிபட்டதால்தான் இப்பெயர் பெற்றது. ஆதிஇராமர் இங்கு வந்து அணைகட்டி இலங்கைக்குச் சென்று இராவணனை வதம் செய்தார். அதனால் ஏற்பட்ட பழிநீங்க இறைவனை பூசித்தார். அதனால் ஆதிசேது எனவும் இத்தலம் வழங்கப்படுகிறது.

இத்தலத்தில் பிரம்மன் பூசித்து இறைவன் வாயிலாக வேத உபதேசம் பெற்று படைப்புத் தொழில் கைவரப் வரப்பெற்றார் என்பர். இத்தலத்தில் விசுவாமித்திரரும் இறைவனை வணங்கி பிரம்மரிஷி ஆனார் என்பார்கள்.

பின்னர் இராமர் பூசித்து வீரகத்தி தோஷம் நீங்கப் பெற்றார். உலகம் சமநிலை பெற இறைவனால் அகத்தியர் தென்திசைக்கு அனுப்பப்பட்டார். அகத்தியருக்கு திருமணக் கோலத்தை இறைவன் காட்டியது இத்திருத்தலத்தில்தான். கர்ப்பக் கிரகத்தில் சுவாமிக்கு பின்பக்கத்தில் இறைவன் திருமணத் திருக்கோல உருவம் உள்ளது. ஒரு எலி நெய் உண்ண வந்தது. நெய் உண்ணும்போது விளக்கின் திரி தூண்டப்பட்டது. ஆகவே அந்த எலி மாபலி சக்கரவர்த்தியானது இந்தத் திருத்தலத்தில்தான்.

இத்தல இறைவன் பெயர் வேதாரண்யேஸ்வரர் என்பதாகும். தேவாரம் "மறைக்காட்டுறையும் மணாளன்" என்று குறிப்பிடுகிறது. அம்மையின் பெயர் யாழைப்பழித்தாமொழிம்மை. இத்தலத்தின் விருட்சம் வன்னி மரம். சப்தவிடங்க திருத்தலங்களில் ஒன்றாகும். ஆதலால் தியாகமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றார். அவர் பெயர் புவனிவிடங்கர். நடனம்: ஹம்சநடனம். தீர்த்தம்: மணிகரிணிகை, வேதாபூஷண தீர்த்தம், வேதாமிருகம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் சேரமான் பெருமானோடு வழிபட்ட தலம்.

வேதாரண்யம் விளக்கழகு என்பார்கள். ஆதலால்தான் பராந்தகசோழன் முதலியவர்கள் விளக்குத் தருமம் செய்துள்ளனர்.

இருவரும் அங்கிருந்த அடியார்களை நோக்கி "இ∴தென்ன" என்றனர். அதற்கு அவர்கள் "இக்கோவிலில் வேதங்கள் பூஜித்தன. வேதங்கள் பூஜித்தபின்னர், கோவிலுக்கு காப்பிடப்பட்டது. அன்றுதொட்டு இன்றுவரை கோவில் மூடப்பட்டுள்ளது. வேறு வழி மூலமாகத்தான் உள்ளே சென்று வழிபடுகிறோம்" என்றனர்.

இதைக்கேட்ட ஞானசம்பந்தர் நாவுக்கரசரை நோக்கி, "அப்பரே, எப்படியாயினும் நாம் திருவாயிலின் வழியாகத்தான் செல்லவேண்டும். ஆகவே இந்தக் கதவின் காப்பு நீங்கி கதவு திறக்கப் பாடும்" என்றார். உடனே நாவுக்கரசரும் பண்ணின் நேர்மொழியாள் எனத் தொடங்கும் பின்வரும் பதிகத்தை பாடினார்.

பண்ணின் நேர்மொழியாள் உமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே (5-10-1)

ஆனாலும் கதவு திறக்கவில்லை.

அதைத் தொடர்ந்து பத்து பதிகங்கள் பாடினார் நாவுக்கரசர். ஆனாலும் கதவு திறக்கவில்லை. நாவுக்கரசர் மனம் தளர்ந்தார். பத்து திருப்பாடல்கள் பாடியுங் கதவு திறக்காமை கண்ட அப்பர்

அரக்கனை விர லாடர்த் திட்டநீர்
இரக்கம் ஒன்றிலீ றெம்பெரு மானிரே
சுரக்கும் புன்னைச் சூழ்மறைக் காடரே
சரக்க வித்தக வந்திறப் பிம்மினே (5-10-11)

"இரக்கமில்லையோ!" எனக்கூறி பாடிய பாடலைக் கேட்டு, நாவுக்கரசரின் இன்னிசையில் மூழ்கியிருந்த இறைவன் விரைந்து கதவைத் திறந்தான். கதவு திறக்கப் பாடிய செயலை திருப்பாதிரிப்புலியூர் வெண்பா

திரையேற விட்டகற்றூண் பூணர்ப்பறச்சொற்
றுணர்ப் பதிகந் திருந்தப்பாடி
விரையேற விட்டநறை மிகழிமுடி
யரனருளால் வென்றி மேலு
விரையேற விட்டசம ணறவுயிர்கள் பவக்கடனின்
றேன்று மேறக்
கரையேற விட்டபிரான் புகழ்விளைந்த
நாவரசைக் கருதி வாழ்வாம்.

திறந்த கதவு திறந்தே இருந்தால் எப்படி? திறந்த கதவு மூடவேண்டும் அல்லவா? நாவுக்கரசர் சம்பந்தரை நோக்கி திறந்த கதவு மூடும்படியாகப் பாடச் சொன்னார்.

சதுரம்மறை தான்றுச் செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்க வெனக்குன்
கதவந்திருக் காப்புக்கொள் ளுங்கருத் தாவே (2-32-1)

"எனக்கு அருள் செய்க" என்று சம்பந்தர் வேண்டுவது அவருடைய திருவாக்கில் வேறு எங்கும் காண்பது அரிதாகும். இப்பதிகத்தில் சம்பந்தர் திருமறைக்காட்டை அழகாக வருணிக்கிறார். எவ்வாறு தெரியுமா?

"சங்கம், சரளம் மலைதான் கரைக்கு எற்றும் வங்கக் கடல்சூழ் மறைக்காடு" என்றும், "குரவங்குருக் கத்திகள் புன்னை கண் ஞாழல் மருவம் பொழில் சூழ் மறைக்காடு" என்றும் (குருக்கத்தி–மாதவி, ஞாழல்–புவிநகக்கொன்றைகோங்கு) என்றும், "வானோர் மறை மாதவத்தோர் வழிபட்ட னோர் பொழில் சூழ் திருமறைக்காடு" என்றும், "கலம்கொள் கடலோதம் உலகு கரைமேல் வலங்கொள்பவர் வாழ்த்திசைக்கும் மறைக்காடு" என்றும் வாய்குளிரப் பாடுகின்றார்.

திருநாவுக்கரசர் பத்து பாடல்கள் பாடியும் கதவு திறக்கவில்லை. ஆனால் ஞானசம்பந்தரின் முதல் பாடலிலேயே கதவு மூடிக்கொண்டது. ஏன்? இது இன்றுவரை புரியாத புதிராகவே உள்ளது. இதற்கு அறிஞர்கள் பல்வேறு காரணங்களை கூறுகின்றனர்.

திருக்கதவை திறப்பதற்கு ஞானசம்பந்தர் முதலில் பாடியிருக்கலாம் அல்லவா? பாடவில்லையே ஏன் தெரியுமா? எப்பொழுதும் சம்பந்தருக்கு தான் ஞானப்பால் உண்ட குழந்தை, பார்வதியின் பாசமிகு பிள்ளை என்றஎண்ணம் உண்டு. அப்பரைவிடவும் தான் பெரியவர் என்றஎண்ணமும் உண்டு. அதனால்தான் முதலில் அவர் பாடவில்லை. அப்பரைப் பாடச் சொன்னார். வேதங்களால் பூசிக்கப்பட்டு அடைத்து விட்டுப்போன கதவை "பதிகம் பாடித் திறவுங்கள்" என்றார் சம்பந்தர்.

ஏனெனில் அவர் மறையவர் குலத்தில் பிறந்தவர். நான்கு வேதங்களும் பயின்றவர். அம்மையின் அருட்பாலை உண்டவர். அதனால்தான் தான் முதலில் பாடினால் என்னால்தான் கதவு திறந்தது என்று பலர் நினைக்கக் கூடும். அதுகூடாதென்றும் தமிழ் மறைக்குத் தெய்வீக ஆற்றல் உண்டு. அதனால் மட்டுமே கதவைத் திறக்கமுடியும் என்பதை அப்பர் சுவாமிகளின் வழியாக உலகுக்கு உணர்த்தினார் என்பார்கள்.

அம்மையும், அப்பனும் மகிழ்ந்து குலாவிப் பேசிக்கொண்டிருக்கின்றனர். இதனைத் தம் ஞானக்கண்ணால் கண்ட நாவுக்கரசர், "பண்ணின் நேர்மொழியாள் உமை பங்கரோ" என்று பாடுகின்றார். "நாங்கள் மண்ணில் வாழ்பவர்கள், உம்மை வந்து வணங்க வேண்டாமோ?

அதனால் கதவைத் திறந்து உங்களை காண்பதற்கு வழி செய்யுங்கள்" என்கிறார். அப்பர் பெருமான் பாடுவதைக் கேட்ட இறைவன் மெய்மறந்து நின்றார். அதனால்தான் பத்து பாடல்கள் பாடியும் கதவு திறக்கவில்லை. கடைசியில் இறைவனை சுருக்கென்று தைப்பதைப்போல் கதவைத் திறவுங்கள் என்கிறார். கதவு திறந்தது என்பர்.

பத்து பாடல்கள் பாடியும் கதவு திறக்கவில்லை. ஒரே பாடலில் கதவு மூடிக்கொள்கிறதே! இதற்கு அறிஞர்கள் கூறும் காரணம் இங்கு எண்ணிப்பார்க்கத் தக்கது. நால்வகை நெறியைப் பரப்ப நால்வகை பெருமக்கள் வந்தனர். அவர்களுள் பிள்ளை நிலையை பரப்ப வந்தவரே திருஞானசம்பந்தர். தொண்டராக வந்தவர் அப்பர் பெருமான். தோழராக வந்தவரே சுந்தரர். ஞானப் பாங்கோடு துணையாக வந்தவர் மாணிக்கவாசகர்.

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என தமிழை மூவகையாகச் சொல்வர். இயற்றமிழ் அப்பர்! இசைத்தமிழ் சுந்தரர்! நாடகத்தமிழ் சுந்தரமூர்த்தி!. நாயன்மார்கள் நால்வரில் இருவர் இயற்றமிழையும் இசைத் தமிழையும் பாடவந்தவர்கள். இயற்றமிழால் பாடிக் கதவைத் திறக்கவைத்தவர் அப்பர்! இசைத்தமிழால் பாடிக் கதவை மூடவைத்தவர் சம்பந்தர்.

மகனாக வந்தவர் ஞானசம்பந்தர். அப்பர் பெருமான் தொண்டர். மகனுக்கு அதிகம் வேலை கொடுக்கக்கூடாது என்பதற்காக அவர் பாடத் தொடங்கியவுடனே கதவை மூடிவிட்டார் இறைவன். தொண்டரை வேலை வாங்கவேண்டும் என்பதற்காக பத்துப் பாடல்களையும் பாடவைத்தார் இறைவன். இது பொருந்துவதாக இல்லை. காரணம் என்ன?

இறைவனுக்கு மகன், தொண்டன், ஆண்டான், அடிமை, பணக்காரன், ஏழை என்ற பேதங்கள் எதுவும் இல்லை. அவன் எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரையும் தன்னுயிர்போல என்னுபவன். அவன் இவ்வாறு செய்வானா?

சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் மோட்ச வீட்டிற்கு வாயில் எனக்கூறப்பெறும் தேவாரப் பாமாலையைச் சாத்தி அருளிய திருநாவுக்கரசு சுவாமிகளே சபையில் நின்று ஆடுதலில் வல்லவராகிய சிவபெருமான், திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலைக் கொடுத்து, உமக்கு உலகத்தில் இல்லாத சூலைநோய் கொடுத்தாலும் என்ன குறைவு? தேவாரப் பாடல்கள் பாடுவதில் நீயும், சம்பந்தரும் எல்லாவிதத்திலும் சமம் ஆவீர்கள்.

வீட்டிற்கு வாயில் எனுந்தொடை
சாத்துசொல் வேந்த பொது
ஆட்டிற்கு வல்லன் ஒருவற்கு
ஞான அமுது உதவி
நாட்டிற்கு இலாத குடர்நோய்
நினக்குமுன் நல்கினும் ஏன்?
பாட்டிற்கு நீயும் அவனும்
ஒப்பீர் எப்படி யினுமே

ஆரியன் என்றோ, தமிழன் என்றோ, பிராமணன், சூத்திரன் என்றோ கூறும் கருத்து பொருந்துவதாக இல்லை. ஆண்டவனுக்குக் குழந்தை, தொண்டன் என்றபேதமில்லை. பின் இறைவன் ஏன் இவ்வாறு செய்தான். அப்பர் பாடுகின்றபத்துப் பாடல்களும் முடியும் வரை கதவு திறக்கவில்லை. மூடிய கதவுக்குள்ளே இறைவன் அப்பாடல்களைக் கேட்டு சுவைத்துக் கொண்டிருந்தான். சம்பந்தர் பாடியவுடனே கதவை மூடிவிட்டார் ஏன் தெரியுமா? சம்பந்தர் பத்து பாடல்கள் பாடும்வரை கதவு மூடாமல் இருந்திருந்தால் வேறுபாடு வந்திருக்கும். எப்படித் தெரியுமா? சம்பந்தர் பாடும்போது கதவு திறந்திருந்தால் இந்த உலகம் என்ன சொல்லியிருக்கும். பிராமணன் பாடும்போது கதவு திறந்திருந்தே கேட்டான் என்று பேசும் அல்லவா. ஆகவேதான் முதல்பாடலிலேயே கதவு மீண்டும் மூடிவிட்டான். ஆகவே இருவரிடமும் சமமாகத்தான் இருந்திருக்கிறான் இறைவன் என்று சிலர் இதற்கு காரணம் கூறுவார்கள்.

மூடிய கதவு திறந்ததும், திறந்த கதவு மூடியதும் தமிழால்தானே முடிந்தது.

பாண்டியன் நோய் நீக்குதல்

திருமறைக்காட்டில் அப்பரும், சுந்தரரும் கோவிலின் கதவு திறக்கவும், மூடவும் பாடினர். அவர்கள் மறைக்காட்டில் தங்கியிருந்தபோது பாண்டிய நாட்டில் சமண சமய இருள் சூழ்ந்திருந்தது. சைவ சமய ஒளி குன்றி இருந்தது. பாண்டிய மன்னனும், சமண சமயத்தை தழுவி அம்மதமே தன்னையும் தன் நாட்டையும் உய்விக்க வந்தது என நம்பினான்.

அந்த நாட்டில் எங்கு பார்த்தாலும் மயிர்ப்பீலிகளையும், கமண்டலங்களையும் கையில் பிடித்த சமணர்கள் காணப்பட்டனர். பாண்டிய நாட்டுப் பதிகள் எல்லாம் சமணர் பாழிகளும், சமணப் பள்ளிகளுமே மிகுந்து விளங்கின. மயிர்ப் பறித்த தலையோடும், இடையில் பாயினையும், தடுக்கினையும் உடுத்தி சமண சமயக் குருக்கள் எங்கும் ஈக்களைப்போல் மொய்த்துக் கொண்டு இருந்தார்கள்.

அப்போது பாண்டிய நாட்டில் சோழன் மகளும், பாண்டியனின் அரசியுமான மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் மட்டும் சைவ நெறியில் ஒழுகி வந்தனர் என்றால் பாண்டிய நாடு சமணத்தால் எவ்வாறு சூழ்ந்திருந்தது என அறிந்து கொள்ளலாம்.

சம்பந்தரிடம் அனுப்புதல்:

காழிப்பிள்ளையார் உமாதேவியாரிடம் ஞானப்பால் உண்டதையும், அவர் திருமறைக்காட்டில் தங்கியிருந்ததையும் அறிந்தனர். கவலை தளர்ந்தது. சிந்தை கிளர்ந்தது. முகம் மலர்ந்தது. மகிழ்ச்சி வளர்ந்தது. இதனைச் சேக்கிழார்

கேட்டஅப் பொழுதே சிந்தை
கிளர்ந்துஎழும் மகிழ்ச்சி பொங்க
நாள்பொழுது அலர்ந்த செந்தா
மரைநகை முகத்தர் ஆகி
வாள்படை அமைச்சனாரும்
மங்கையர்க்கரசியாரும்
சேண்படு புலத்தாரேனும்
சென்றுஅடி பணிந்தார் ஒத்தார் (4-25-9)

ஞானம் பெற்றஞானசம்பந்தரால் பாண்டி நாட்டில் மீண்டும் சைவசமயம், பரவ முடியும் என்று எண்ணினார். அறிவு மிக்க சிலரைத் திருமறைக்காடு சென்று சம்பந்தரை அழைக்குமாறு அனுப்பி வைத்தனர்.

மறைக்காடு அடைதல்:

அந்த அறிவுடைய ஏவல் மக்கள் அங்கிருந்து நீங்கிச் சென்று சோழநாட்டின் மருத நிலங்களையும் காடுகளையும், ஆறுகளையும் கடந்து சென்று தேன் பொருந்திய தாழைகள் பூக்கும் நெய்தல் பகுதியான திருமறைக்காட்டின் வெளிப்பகுதியை அடைந்தனர்.

காழிப்பிள்ளை தங்கியிருந்த பெருமடத்திற்குச் சென்று சம்பந்தரைச் சந்தித்தனர். சோழன் மகளும், அமைச்சரும் சொன்ன சேதியை கூறினர். பார்வதியின் ஞானப்பாலை அருந்திய சம்பந்தர் பாண்டிய நாடு வருவதற்கு இசைவினைத் தந்தார்.

அப்பொழுது நாவுக்கரசர், ''ஐயனே, கோள்நிலைகளும் தீயனவாய் உள்ளன. அங்கே செல்வதற்கு சம்மதிப்பது சரியல்ல" என்றார். அப்பொழுது ஞானசம்பந்தர் “பரசுவது நம்பெருமான் கழல்கள் என்றால் பழுது அணையாது” எனக் கூறி பரமன்தாள் போற்றி “வேயுறு தோளி பங்கன்” என்று தொடங்கும் பதிகத்தைப் பாடியருளினார்.

மேலும், இரண்டாவது பாடலில் “எலும்பு, பன்றிக் கொம்பு, ஆமை ஒடு ஆகியவற்றைச் சேர்த்து மார்பில் ஆரமாகத் திகழ, இடப வாகனத்தில் ஏறி, உமாதேவியை உடனாகக் கொண்டு, பொன் போன்ற கொன்றை மாலையையும், ஊமத்த மலரும், கங்கையும் சூடி, என் உள்ளத்தில் வந்து ஈசன் புகுந்தான். அதனால் ஆயில்யம், மகம், கேட்டை, திருவாதிரை மற்றநாள்களாக உள்ள பரணி, கிருத்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி அன்புடன் நல்லதாக, அடியார்களுக்கு மிகவும் நல்லதாக அமையும்” என்கிறார்.

என்பொடு, கொம்பொடுஆமை இவைமார்பு இலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பது ஒன்றோடு ஏழுபதினெட்டோடு ஆறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே (2-85-2)

(ஒன்பது - அசுவினி முதலாகக் கொண்ட எண்ணின் ஒன்பதாவது நட்சத்திரம் ஆயில்யம்; ஒன்பதோடு ஒன்று-பத்தாவது நட்சத்திரம் மகம்; ஒன்பதோடு ஏழு-பதினாறவது விசாகம், பதினெட்டு-கேட்டை, ஆறு-திருவாதிரை உடனாய நாட்கள் மற்றயவை. அவை பரணி, கார்த்திகை, பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி-நாள் என்பது திதிகளும் கிழமைகளும் குறித்தலும் ஆகும். 27 நட்சத்திரங்களில் 12 குறிப்பாக ஆகாதவையாக சோதிட நூல்களில் சொல்லப்பட்டன)

ஆதிரைபரணி ஆரல்ஆயில்ய முப்பூரம் கேட்டை
நீதுறவிசாகம் சோதிசித்திரை மகம் ஈராறும்
மாதனம் கொண்டன் தாரரர் வழிநடைப்பட்டார் மீளார்
வாய்தனில் படுத்தார் தேறார் பாம்பின் வாய்த்தேரை தானே!

என்கிறது சோதிட நூல்.

இப்பதிகத்தை கேட்ட மொழி மன்னர் தானும் உடன் வருவதாகக் கூறினார். புகலிவேந்தர், "அப்பரே! இந்த நீர் நாடான சோழ நாட்டில் எழுந்தருளியிருப்பீர்!" எனக் கைம்மலர்களை கூப்பி வணங்கி அவரது செயலைத் தவிர்க்குமாறு செய்தார். நாவுக்கரசரும் அதற்கு இசைந்தார். சம்பந்தப்பிள்ளையார் ஐந்தெழுத்தோதி முத்துச் சிவிகையின் மீது எழுந்தருளினார். மதுரை எல்லையை அடைந்தார்.

மதுரையை அடைதல்:

அப்பொழுது பாண்டிய நாட்டில் எண்பெரும் குன்றுகளில் வாழ்ந்த சமணர்களுக்கு பல்வேறு தீய நிமித்தங்கள் தோன்றின. சமணப்பள்ளிகள் மீதும், பாழிகள் மீதும், சமணக் குருமார்கள் தங்கும் மடங்களின் மீதும் அசோக மரங்களின் உச்சிகளின் மீதும் ஆந்தைகளும், கோட்டான்களும் சண்டையிட்டுக் கொண்டு பின்னால் வர இருக்கும் கேட்டினைப் புலப்படுத்தின. சமணர்கள் கையிலேந்திய மயிர்ப்பீலிகளும், இடையில் உடுத்திய தடுக்கும் பாயும் தாமே நழுவிக் கீழே விழுந்தன.

சமணத் தவப்பெண்கள் தங்களுக்குள் தாங்களே சினந்து எழும் கலகங்களைச் செய்தனர். சமண முனிவர்களும் தம்முள் மாறுபட்டுக் கொண்டு ஒருவருக்கொருவர் ஊறு செய்தனர்.

இவ்வாறு கிராமங்கள் தோறும் வாழும் சமணர்கள் தாங்கள் கண்ட கனவுகளை ஒருவருக்கொருவர் சொல்லிக் கொண்டனர். பின்னர் அவர்கள் அனைவரும் புறப்பட்டு மதுரை மாநகரம் வந்தடைந்தனர்.

மதுரையில் இருந்தவர்களும், வெளியில் இருந்து வந்தவர்களும் ஒன்று கூடி அரசனிடம் சென்றனர். தாங்கள் கண்ட கனவுகளை அரசனிடம் விவரித்தனர். "அருக தேவர் ஓட அவருடன் ஊராரும் ஓடினர். குருபத்தினிகள் ஓடினர். குருக்கள் கழுதைமேல் ஊர்ந்து சென்றனர். கானிடை நட்டம் ஆடும் கண்ணுதல் தொண்டர் எல்லாம் மீனவன் மதுரை தன்னில் விரவிடக் கண்டோம். அதுமட்டுமா? கோனவன் தானும் வெய்யக் கொழுந்தழல் முழுகக் கண்டோம். ஆனபின் எழவும் கண்டோம். இளமையான சேங்கன்று ஒன்றுவந்து நம் சங்கத்தை மிதித்துக் கலக்க, அதனால் அனைவரும் சிதறுண்டு ஓடி, யாரும் அதைத் தடுக்க அஞ்சி கண்ணில்பட்ட மரங்களில் ஏறிப் புகலிடமின்றிப் புலம்பவும் கண்டோம். நமது குருமார்களுக்கு பெருந்தீங்கு விளைவது உறுதி" என்றனர்.

கானிடை நட்டம் ஈடும்
கண்ணுதல் தொண்டர் எல்லாம்
மீனவன் மதுரை தன்னில்
விரவிடக் கண்டோம் என்பார்
கோன்அவன் தானும் வெய்யக்
கொழும் தழல்முழுகக் கண்டோம்
ஆனபின் எழவும் கண்டோம்
அதிசயம்-இதுஆம் என்பர் (பெபு. 2542)

கோனவன் தானும் வெய்யக் கொழுந்தழல் முழுகக் கண்டோம் என்பதற்கு மன்னவன் வெப்பு நோயால் வீழ்வான் என்றும், பின்னர் அந்நோய் நீங்கப் பெற்று நலம் பெறுவான் என்றும் குறிப்பால் உணர்த்துகின்றனர்.

பாண்டியன் தேவி மங்கையர்க்கரசியாருக்கும், அமைச்சர் பெருமான் குலச்சிறையாருக்கும் அதே நேரத்தில் நல்ல நிமித்தங்கள் தோன்றின. அவர்கள் அளவில்லாத மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்த சமயம், திருஞானசம்பந்தரின் வருகையை கேள்வியுற்றார்கள். அச்செய்தியைக் கொண்டு வந்தவர்களுக்கு வேண்டுவன வழங்கினார்கள்.

வரவேற்கச் செல்லுதல்:

மங்கையர்க்கரசியாரை வணங்கி நின்றகுலச்சிறையாரை நோக்கி “நம் பெருமானாரான ஞானஅமுது உண்டவர் திருமுன் சென்று இங்கு தாங்கள் வந்தமையால் யாங்கள் உய்வு பெற்றோம் என்கூறி வரவேற்பீராக” என்று கூறினார். ஆலவாய் அண்ணலை வணங்கவேண்டும் என்று கணவரிடம் விடைபெற்று அம்மையார் திருக்கோயிலுள் சென்று இறைவனை வணங்கினார். ஞானசம்பந்தரை வரவேற்கும் பொருட்டு எதிர்பார்த்து நின்றார்.

திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகைமேல் வரும்பொழுது, முழுமதிபோல் முத்துக்குடைய நிழற்றினார்கள். தொண்டர்கள் அவரைச் சூழ்ந்து துதித்தார்கள். துந்துபி முதலியா இசைக் கருவிகள் கடல்போல் முழங்கின. செந்தமிழ்க் காற்று முன்னே வந்து அவரை எதிர்கொண்டது. மண்ணும், விண்ணும் பலநாள் புரிந்த புண்ணியத்தின் படையெழுச்சிபோல் அக்காட்சி இருந்தது.

அடியவர் முழங்கும் சிவனின் திருநாமம் குலச்சிறையார் செவியில் அமுதம்போல் தேங்கியது. அப்பொழுதே அவர் மண்மிசை வீழ்ந்து வணங்கினார்.

அஞ்சலி குவித்த கரங்களும் தலைமேல்
அணைந்திடக் கடிதுசென்று அணைவார்
நஞ்சுஅணி கண்டர் தம்திருமகனார்
உடன்வரு நல்தவக் கடலை
நெஞ்சினில் நிறைந்த ஆர்வம்முன் செல்லக்
கண்டுநீள் நிலத்திடைத் தாழ்ந்து
பஞ்சவர் பெருமான் மந்திரித் தலைவர்
பாங்குஉறஅணைந்துமுன் பணிந்தார்

(பெபு 2558)

ஞானசம்பந்தர் தமது தாமரைக் கரங்களால் குலச்சிறையாரை எடுத்தார். "அன்பரே! சோழர் பெருமான் குலமகளார்க்கும், உமக்கும் சிவபெருமான் திருவருள் பெருகும் தன்மை சிறப்பாக இருக்கின்றதோ?" என்று வினவினார்.

பாண்டியனின் நலம் பற்றிக் கேட்கவில்லை. ஏன்! அவன்தான் சமண மதத்தைத் தழுவிக் கொண்டிருக்கிறானே!

அதற்கு அமைச்சர், "சென்ற காலத்தில் பழுது இன்றி நின்ற இயல்பும், இனி எதிர்காலத்தில் வரும் சிறப்புடைய திறமும், இன்று இங்கு தாங்கள் எழுந்தருளப் பெற்றதால் விளங்கும். இதனால் முக்காலத்திலும் திருவருள் உடையவரானோம். சமண சமயத்திலே அழுந்திய இந்த நாடும், நற்றமிழ் மன்னனும் உய்வு பெற்று வெற்றிகொள்ளும் திருநீற்றின் ஒளியில் விளங்கும் மேன்மையையும் பெற்றோம்" என்றார். இதனைச் சேக்கிழார்

சென்றகாலத்தின் பழுதுஇலாத் திறமும்
இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்று எழுந்தருளப் பெற்றபேறு இதனால்
எற்றைக்கும் திருவருள் உடையேம்
நன்றி இல் நெறியில் அழுந்திய நாடும்
நல்தமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்று ஒளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்

(பெ.பு 2562)

இப்பாடல் அமைச்சரின் நாவன்மையை எடுத்துக் காட்டுகின்றது. நாவன்மையை மட்டுமா? அவருடைய நுண்ணறிவினையும் எடுத்துக் காட்டுகின்றது.

சம்பந்தர் “அம்மையாருக்கும், உமக்கும் திருவருள் பெருக நிகழ்கின்றதா?” என்று நலம் விசாரித்தார். அதற்கு அமைச்சர் அளித்த இவ்விடை அற்புதமானது. “சென்றகாலத்தில் பழுது இல்லாமல் இருந்தோம். அதனால்தான் தேவரீரின் வருகை பெற்றோம்.

இன்று அவரின் வருகை பெற்றதனாலே இனி எதிர்காலத்திலும் சிறப்பு பெறுவோம். எனவே மூன்று காலத்திலும் நாங்கள் நலமே பெற்றோம். எங்கள் நாடும், மன்னனும் உய்ந்திட திருநீற்றின் சிறப்பை அடைந்துவிட்டோம்” என்று உறுதியுடன் இறந்தகாலத்தில் கூறியதை வியந்து பாராட்டுகின்றோம்.

‘‘தேவரீருடைய நல்வரவைக் கேட்ட மங்கையர்க்கரசியார் பெரிதும் மகிழ்ந்து பெறுதற்கு அரிய பெரும்பேறு பெற்றதாக எண்ணுகிறார்.

அதனால்தான் அடியேனை தங்களை வரவேற்கும் பொருட்டு அனுப்பினார்” என்று கூறி மீண்டும் மண்மிசை வீழ்ந்து பணிந்தார்.

ஞானசம்பந்தர் திருஆலவாயாகிய மதுரையம்பதியை அடைந்ததில் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார். அன்புடன் நிலமுறைவீழ்ந்து பணிந்தார்.

மங்கையர்க்ரசி வளர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே. *(3-120-1)*

வெற்றவே அடியார் அடிமிசை வீழும்
விருப்பினன் வெள்ளைநீறு அணியும்
கொற்றவன் தனக்கு மந்திரி யாய
குலச்சிறைகுலாவி நின்று ஏத்தும்
ஒற்றைவெள் விடையன் உம்பரார் தலைவன்
உலகினில் இயற்கையை ஒழித்திட்டு
அற்றவர்க்கு அற்றசிவனுறைநின்ற
ஆலவாய் ஆவதும் இதுவே *(3-120-2)*

அரசியார், அமைச்சர் இருவருடைய பணியும் கொண்டு வீற்றிருக்கின்றார் இறைவர். அத்தகைய ஆலவாய் இதுவே எனத் திருப்பதிகம் பாடினார் திருஞானசம்பந்தர். அவர் மதுரையில் பாடிய முதல் பதிகம் இதுவே ஆகும். இது வழியில் மதுரை தோன்றக் கண்ட இடத்தில் பாடியது. மங்கையர்க்கரசியார் “வரிவிளக்கை மடமானி” என்று சிறப்பிக்கப் பாடுகிறார்.

வரிகளையுடைய வளையல்களை அணிந்த இளமை வாய்ந்த சோழர்குலப் பெண் என்பது இதன் பொருளாகும். இது சோழர் குடியில் பிறந்தவரைக் குறிக்கும் சொல்லாகும். "வரிவாள் மானிக்கும், நேசனுக்கும் அடியேன்" எனத் தொடங்கும் திருத்தொண்டர் தொகையிலும் குறிக்கப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் குலச்சிறையாருடன் திருக்கோயிலுக்கு சென்றார். எட்டு உறுப்புகளாலும், ஐந்து உறுப்புகளாலும் அளவில்லாதபடி வணக்கங்கள் செய்து உள்ளத்தில் நிறைந்து பொங்கி எழும் அன்பின் மிகுதியால் உடல் மயிர்க்கூச்செரிதலும், சிவந்த கண்கள் பொழிகின்றநீர் அருவி போன்றபெருக்கும், திருநீற்றின் ஒளி விளங்கும் திருமேனி முழுவதும் பொருந்துமாறு நின்று சீகாழித் தலைவர் வணங்கித் துதித்தார்.

அங்கம் எட்டினும் ஐந்தினும்
அளவு இன்றி வணங்கிப்
பொங்கு காதலின் மெய்ம்
மயிர்ப் புளகமும் பொழியும்
செங்கண் நீர்தரும் அருவியும்
திகழ் திரு மேனி
எங்கும் ஆகி நின்று
ஏத்தினார் புகலியர் இறைவர் (பெ.பு. 2569)

மாணிக்கவாசகர், "உள்ளங்கால் முதல் உச்சியளவு நான் நெஞ்சு ஆகி உருக வேண்டும்.

அன்புக் கண்ணீர் மல்குவதற்கு எனக்கு இரண்டு கண்கள் போதாது, உடம்பெல்லாம் கண்ணாக அவைகளில் இருந்து கண்ணீர் பெருகி வெள்ளமாகப் பாய்தல் வேண்டும்" என்கின்றார்.

உள்ளத்தாள் நின்றுச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளம்தான் பாயாதால்

என்பது அவர் பாடல். திருஞானசம்பந்தர் இறைவனைத் துதிக்க உள்ளே சென்ற போது எதிர் செல்லாது ஒருபுறம் ஒதுங்கிய அம்மையார், அவர் திரும்பி வரும்போது எதிர்சென்று கைகூப்பி வணங்கித் திருவடியில் வீழ்ந்தார். அமைச்சர் அவரை இன்னார் என அறிவித்தார். திருவடியில் வீழ்ந்தவரை ஞானசம்பந்தர் தம் அருட்கைகளால் எடுத்தார். அவரைத் தொழுதபடியே எழுந்த அரசியார், "தன் கருத்து முற்றுப் பெற்றது" என நினைத்து கண்களில் நீர்மல்க, பவளவாய் குழறி, "யானும், என்பதியும் செய்த மாதவம்தான் என்னே" என்று யாழிசை போன்ற மென்மொழிகளால் கூறி மீண்டும் வணங்கி நின்றார்.

பிள்ளையார் எழுந்தருளி முன்
புகுதும் அப்பொழுது
வெள்ளநீர் பொதி வேணியார்
தமைத் தொழும் விருப்பால்
உள் அணைந்திட எதிர்செலாது
ஒரு மருங்கு ஒதுங்கும்
தெள்ளு நீர்விழித் தெரிவையார்
சென்று முன்பு எய்த (பெ.பு. 2572)

ஞான போனகர் எதிர்தொழுது
எழுந்து நல் தவத்து
மானியார் மனக் கருத்து
முற்றியது என மதித்தே
பானல்அம் கண்கள் நீர்மல்கப்
பவளவாய் குழறி
"யானும் என்பதியும் செய்த தவம்
என்கொல்" என்றார் (பெ.பு. 2575)

ஒரு காரியத்தை முன்னிட்டு ஆவலால் செய்வோரைக் குறுக்கிடலாகாது என்பது ஒரு பொது விதி. அதனால்தான் யாராவது வெளியூர் செல்லும்போது "எங்கே போகிறாய்?" எனக் கேட்பதில்லை. அதிலும் திருக்கோயிலுக்குள் வணங்கச் செல்வோரைக் குறுக்கிடவே கூடாது. அதனால்தான் திருஞானசம்பந்தர் உள்ளே செல்லும்போது எதிர் செல்லாது அம்மையார் ஒதுங்கி நின்றார். அவர் திரும்பி வரும்போதுதான் திருவடியில் வீழ்ந்தார். அடி வீழ்ந்தவரைக் கைகளால் எடுத்தமையால் தம்நாடு எடுக்கப்பட்டதாக மதித்தார் அரசியார். ஆதலால் தம் கருத்து முற்றியதென்று மதித்தார்.

''யானும் என் பதியும் செய்த தவம்'' என்றசொற்களில் உள்ள நயத்தைக் கண்டு இன்புறலாம். "தங்கள் வருகை என் கணவர் செய்த தவம்" என்பது ஒரு பொருள். பதி என்றால் நகரம் எனப் பொருள் கொண்டு தங்கள் வருகை இந்நகரத்தில் உள்ளோர் செய்த தவம் எனவும் மற்றொரு பொருள் கிடைக்கின்றது.

ஞானசம்பந்தர் "புறச்சமயத்துக் கிடையே சைவத் தொண்டைக் காத்து வாழ்வீர்! யாம் உம்மைக் காணவே வந்தோம்" என்றார். அமைச்சர்பிரான் காட்டிய ஒரு திருமடத்தில் திருஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்தார். அன்றிரவு சமணர்கள் ஓரிடத்தில் கூடினார்கள். சிவனடியார்கள் மதுரைக்கு வந்ததையும் அவர்கள் பதிகம் ஓதும் ஓசையையும் கண்டும் கேட்டும் மனம் புழுங்கினார்கள். சிவனடியார்களுக்கு இடர் புரிய வேண்டும் எண்ணினார்கள். அரசனிடம் சென்று "மதுரையில் இன்று சைவர்கள் வர, நாங்கள் கண்டு முட்டு" என்று கூறினார்கள்.

ஆவதேல் நுமக்கு அடுத்தது
கூறுவீர் என்று
காவலன் பரிந்து உரைத்தலும்
கார் அமன் கையர்
மாவலாய் உன்தன் மதுரையில்
சைவ வேதியர் தாம்
மேவலால் இன்று கண்டுமுட்டு
யாம் என்று விளம்ப (பெ.பு 2586)

சமணர்கள் கூறும்போது "நமது மதுரை"யில் என்று கூறாமல் "உம் மதுரை" எனக் கூறினர். அவ்வாறு வேறுபடுத்தக் காரணமென்ன? அரசன் மீண்டும் சைவசமயத்தை தழுவப்போகிறான் என்பதை அறிந்துதானோ "உம் மதுரை" என்றனர்!

அதுகேட்டு அவனும் “கேட்டுமுட்டு” என்றான். அவர்களிடம், “அவர்கள் யார்? எதன் பொருட்டு வந்தார்கள்?” எனக் கேட்டான். “சோழ நாட்டினிலே, சீர்காழியிலே, ஈசனிடத்தில் ஞானம் பெற்றதாகக் கூறிக்கொண்டு ஒரு வேதியச் சிறுவன் பலரை அழைத்துக்கொண்டு எங்களை வாதில் வெல்லுவதற்காக வந்திருக்கிறான்” என்றார்கள். மன்னன் “அதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?” என்று கேட்டான்.

சமணர்கள் “அரசே! அப்பாலன் தங்கியுள்ள மடத்தில் தீப்பிடிக்குமாறு மந்திரம் செபிக்க விரும்புகின்றோம்” என்றார்கள். “அப்படியே செய்யுங்கள்” என்று கூறி மன்னன் அவர்களை அனுப்பிவிட்டு கவலையுடன் படுத்திருந்தான். அந்த சமயம் அரசி அங்கு வந்தாள். அரசனின் கவலைக்கு காரணம் என்று கேட்டாள். அவனும் நடந்ததைக் கூறினான். அதற்கு அரசியார் “கவலை வேண்டாம். வெல்பவர் பக்கம் நாம் சேருவோம்” என்றாள்.

சமணர்கள் மந்திரத்தை ஓதி, சிவநெறி வளர்க்க வந்தவர் திருமடத்தின்மீது தீயை ஏவினார்கள். ஆதி மந்திரமான திருவெந்தெழுத்தை ஓதுகின்றவர் பார்க்கின்ற திசையில் மற்ற மந்திரச் செயல்கள் போய்ச் சேருமோ? சேராது அன்றோ! தாங்கள் செய்த செயல்கள் பலிக்காமல் போனதைக் கண்ட சமணர்கள் தளர்ச்சி கொண்டனர்.

இதனை மன்னன் அறிந்தால் நம்மை மதிக்க மாட்டான் என்று எண்ணி, சிவனடியார்கள் தங்கியிருக்கும் மடத்திற்கு நடு இரவில் சென்று தீவைத்தனர்.

மந்திரச் செயல் வாய்த்தில
மற்று இனிச் செய்யும்
புந்தி ஆவது இங்குஇதுஎனப்
பொதிதழல் கொடு புக்கு
அம்தண் மாதவர் திருமடம்
புறத்து அயல் இருள்போல்
வந்து தம்தொழில் புரிந்தனர்
வஞ்சனை மனத் தோர். (பெ.பு. 2607)

சிவனடியார்கள் தங்கியிருந்த மடத்திற்கு தீவைத்தனர் எனப் பாடுதற்கு சேக்கிழாருக்கு நா எழவில்லை. தந்தொழில் புரிந்தனர் என்றுதான் கூறுகின்றார். மெய்ப்பொருள் நாயனார் புராணத்தில் முத்தநாதன், மெய்ப்பொருள் நாயனாரைக் கத்தியினால் குத்துகின்றான். அதை சேக்கிழாரால் சொல்ல முடியவில்லை. “நினைத்த அப்பரிசே செய்ய” என்கிறார்.

ஏனாதி நாயனாரை நேர்மையில் வெல்ல முடியாத அதிசூரன் நெற்றியில் நீறு பூசிய கோலத்தோடு திருநீற்றைகேடயத்தால் மறைத்தவண்ணம் போரிடுகிறான். ஏனாதி நாயனார் தாக்க வரும்போது திருநீற்றுக் கோலத்தை காட்டுகிறார்.

ஏனாதி நாயனார் அதைக் கண்டு சூரனைத் தாக்காமல் நிற்கிறார். அச்சமயத்தில் அதிசூரன் கொன்று விடுகிறான். இதனை விளக்க வந்த சேக்கிழார் “முன்நின்றபாதகனும் தன்கருத்தே முற்றுவித்தான்” என்கிறார்.

கம்பராமாயணத்தில் ஒரு காட்சி. கைகேயி தசரதனிடம் இரண்டு வரங்கள் கேட்கிறாள். “ஒன்று பரதன் நாடாள்வது, மற்றொன்று இராமன் காடு செல்வது” என்பதே அவ்வரங்கள். இரண்டாவது வரத்தை தசரதன் தன் வாயினால் சொல்லமுடியவில்லை. அதனால் கைகேயியிடம் இரந்து கேட்கிறான். என்னவென்று! “முதல் வரம் பெற்றுக்கொள், மற்றையது ஒன்றைமற” என்கிறான்.

சமணர் புரிந்த தீச்செயல் வெளிப்படக் கண்ட பரிசனங்கள் அத்தீயை அணைத்து, சம்பந்தரை தொழுது நிகழ்ந்ததை அறிவித்தனர். திருஞானசம்பந்தர், “ஆ! மாதவர் துயிலும் திருமடத்துக்குப் பாவிகள் பழுது செய்வதோ! மன்னவன் ஆட்சி முறையின் தவறேஇதற்குக் காரணம். குடிகள் செய்த குற்றம் கொற்றவனைச் சேர்தல் என்பது அரசியல் முறையாதலால் சமணர்கள் இட்ட தீ பையவே சென்று பாண்டியற்காக” என்று பணிந்து பைந்தமிழ்ப் பதிகம் பாடினார்.

செய்யனே திருவாலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய்யேனைப்
பொய்யராம் அமணர் கொளுவுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே. (3-61-1)

திருஞானசம்பந்தர் பாடிய பாடல் இதுவேயாகும். சேக்கிழாரும் இதே கருத்தைக் கொண்டு

வெய்ய தீங்கு இது வேந்தன்
மேற்று எனும் விதி முறையால்
செய்யனே திரு ஆலவாய்
எனும் திருப்பதிகம்
சைவர் வாழ் மடத்து அமணர்கள்
இட்ட தீத்தழல் போய்ப்
பையவே சென்று பாண்டியற்கு
ஆக எனப் பணிந்தார் (பெ.பு. 2607)

பாண்டிமாதேவியின் மங்கல நாணைப் பாதுகாக்கும் பொருட்டும், குலச்சிறையாரின் அன்பினை மதித்தும், அபராதம் செய்த அரசன் நல்லறிவு பெற்று சிவநெறியை அடைய வேண்டி இருந்ததாலும், தீப்பிணியைப் ''பையவே செல்க'' என்று பணிந்தருளினார்.

வேந்தனுக்கு வெப்பு நோய் வந்ததைக் கேட்டு துனுக்குற்ற தேவியாரும், அமைச்சரும் விரைந்து சென்று அரசனை அனுகினர். வெப்பு நோயால் வேந்தன் உடல் நடுக்குற்றான்.

அந்த வெம்மையால் அருகில் நின்றவரது உடம்பும் வெப்பத்தால் பாதித்தது. அனல் பெருகியது. ஆவி கருகியது. உணர்வு பொன்றியது. ஒருவரும் அரசனை நெருங்க முடியவில்லை. இளம் வாழை இலைக் குருத்துகளையும், இளந்தளிர்களையும் அருகில் வைத்தனர். அவைகளும் வெந்து கருகின. மருத்துவர்கள் திரண்டு வந்து தாம் கற்றகலைகளின் சிகிச்சையனைத்தும் செய்தும் பயனில்லை.

சமணர்கள் அரசனிடம் அணுகி நோயின் மூலத்தை அறியாமலேயே மயிற்பீலியைக் கொண்டு தாம் கற்றமந்திரத்தை உச்சரித்து மன்னன் உடம்பைத் தடவினார்கள். பீலியும், அதைச் சேர்ந்த பிரம்பும் சாம்பலாயின. பின்னர் தமது கமண்டலங்களில் உள்ள நீரை அள்ளி, "அருகனே காப்பாயாக! காப்பாயாக!" என்று கூறிப் பாண்டியன் மேல் தெளித்தனர். அந்த நீர் பொங்கிப் பெருகி எரியும் தீயின்மீது சொரிந்த நெய்போல் ஆகி, அதன்மேலும் நெருப்பினை வாரித் தூவியதைப்போல் ஆகியது.

"நீங்கள் எவரும் இங்கு இல்லாது அகன்று செல்லுங்கள்" என்று மன்னன் சமணர்களைப் பார்த்துச் சொல்லி உணர்வு தளர்ந்து மயக்கமானான். அரசியார் அமைச்சரை நோக்கி "ஞானசம்பந்தர்பால் சமணர்கள் செய்த தீங்கு இவ்வாறு மூண்டது போலும்" என்றார்.

அமைச்சரும், "அதுவே காரணம். தீமை செய்த அவர்கள் இதனைத் தீர்க்க முற்பட்டால் நோய் கூடுமேயன்றி, குறையாது" என்றார். இருவரும் அரசரிடம் சென்று "திருஞானசம்பந்தரால் தான் இந்நோய் அகலும்" என்றனர். திருஞானசம்பந்தர் என்ற மந்திரம் அரசனின் செவியில் சென்ற மாத்திரத்தில் சிறிது அயர்ச்சி தீர்ந்தது.

சமணர்களின் செயலே நோய்க்கு காரணம் என்று எண்ணிய அரசன், "சைவநீதி மறையவச் சிறுவன் வந்து அருள்செய்தால் இந்நோய் அகலும் என்றஉண்மையை நான் அறிவேன். அன்றியும் எனது வெப்பு நோயை நீக்கி வென்றவர் பக்கம் நான் சேர்வேன். அவரை இங்கு அழைத்து வாருங்கள்" என்றான்.

திருஞானசம்பந்தரை அழைத்துவர அமைச்சரும், அரசியாரும் புறப்பட்டார்கள். திருமடம் சென்று ஞானசம்பந்தரைக் கண்டார்கள். அதனைச் சேக்கிழார்

ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசை அன்றி
மண்ணில்வளர் மலர்க்கொழுந்தைத்
தேன்நக்க மலர்க்கொன்றைச்
செஞ்சடையார் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள் (பெ.பு. 2631)

இத்திருப்பாட்டு மிக அருமையானது. அன்பர்கள் மனத்துள் அழுந்த நினைத்து ஞானசம்பந்தரை துதிக்கும் திருப்பாட்டு. “ஞானசம்பந்தப் பெருமான் கருமத்தின் காரணமாக மாயா உடல் தாங்காத தவ முதல்வராதலால் ஞாலத்தின் திருவுருவை” என்கிறார். நான்மறைக்கு இழுக்கு நேரும் போதெல்லாம் அவ்விழுக்கைப் போக்கி, அதன் ஆக்கத்துக்குத் துணை புரியும் மெய்க்குரவர் ஆதலினால் ‘‘நான்மறையின் தனித்துணையை’’ என்கிறார்.

வானுள்ளோர்க்கும், மண்ணுள்ளோர்க்கும் மதி அமுதம் பொழிபவராதலினால் “வானத்தின் மிசை அன்றி மண்ணில்வளர் மலர்க்கொழுந்தை’’ என்கிறார். கொன்றைமலர் பிரணவத்தைக் குறிப்பது. அப்பிரணவத்தை முதலாகக் கொண்டு மறையை இசைத்தமிழ் வழி வளர்ப்பவர் ஞானசம்பந்தப் பெருமான் என்று இப்பாடலுக்குச் சான்றோர்கள் விளக்கம் தருவர்.

அரசியாரும், அமைச்சரும் ஆளுடைப் பிள்ளையாரைத் தனித்தனியாகவும், ஒன்று சேர்ந்தும் முன்நாளும் கண்டனர். அவ்வாறு கண்ட நிலை வேறு. இடையில் நடந்த நிகழ்ச்சிகளாலும், அவற்றைப்பற்றி அவர்கள் இருவரின் மனத்தினுள் எழுந்த வேறுபட்ட எண்ணங்களாலும் தற்போது ஆளுடைப் பிள்ளையாரைக் காணும் நிலை வேறு. முன் கண்டது பொதுக்காட்சி.

இங்கு கண்டது சிறப்புக் காட்சி. ஞான உபதேசத்தால் அரசனையும், நாட்டினரையும் உய்விக்க குரு மூர்த்தியாக எழுந்தருளும் எல்லை ஆதலினால் இவ்வாறு கண்டார்கள் என்ற கருத்தும் காணலாம்.

இங்கு சம்பந்தர் ஞானதேசிகராய் எழுந்தருளுகின்றார். பாண்டியனாகிய சற்சீடனுக்கு ''வினைகளொத்துத் துலையென நிற்றலாலே'' "ஆலவாயிலான் பாலதாயினார் ஞானமாள்வரே" என்பது முதலாகப் பாவனாதீக்கை, பரிசதீக்கை, வாசகதீக்கை முதலியன செய்து வைகைக் கரையையே தீக்க மண்டபமாக வைத்து "முன்னை வல்வினையும் நீங்கி, முதல்வனையறியும் தன்மை" தந்து திருவடியும் சூட்டும் வரலாறுகள் இங்கு கருதத்தக்கன என்பர் சான்றோர். இக்கருத்து பற்றியே "மன்றபாண்டியன், கேட்பக்கிளக்கு மெய்ஞ் ஞானத்தின் ஆட்பாலவர்க்கு அருள் என்பதையறியே" என்று இருபாவிருப.ஃ.து கூறுகின்றது.

ஞானசம்பந்தரைக் கண்டவுடன், சமணர்கள் செய்த கொடுஞ்செயலை அரசியும் அமைச்சரும் நினைத்தனர். கண்களில் இருந்து நீர் அருவிபோல் பெருகியது. பேசுவதற்கு நா எழவில்லை. உடல் நடுங்கியது. பூமியில் விழுந்து புரண்டனர். துன்பக் கடலில் வீழ்ந்தோர் ஒரு கரை கண்டுபிடித்தது போல் அரசியும், அமைச்சரும் சம்பந்தரது திருவடிகளைப் பற்றிக் கிடந்தார்கள்.

பின்னர் ஞானசம்பந்தரை நோக்கி "எம்பெருமானே, சமணர்கள் செய்த தீமை, மன்னனை வெப்பு நோயாகப் பற்றிக் கொண்டது. பலமுறைமுயன்றும் சமணர்களால் அந்நோயைத் தீர்க்க இயலவில்லை. தேவரீர், தாங்கள் எழுந்தருளி மன்னனின் உடல் பிணியையும், உயிர்ப் பிணியையும் தீர்த்து அருள வேண்டும்" என்றனர்.

வெய்ய தொழில் அமண்குண்டர்
விளைக்கவரும் வெதுப்பு அவர்தாம்
செய்யும் அதிமாயை களால்
தீராமைத் தீப் பிணியால்
மையல்உறு மன்னவன் முன்
மற்றுஅவரை வென்று அருளில்
உய்யும் எமதுஉயிரும் அவன்
உயிரும் என்று உரைத்தார்கள். (பெ.பு. 2636)

இங்கு "உய்யும் எமதுயிரும், அவனுயிரும்" எனக் கூறியதை நன்கு கவனிக்க வேண்டும். எமது உயிரைக் காத்தல் தேவரீரது முதற்பாரம். அதனைக் காத்தற்பொருட்டு மன்னனது உயிரையும் காத்தல் வேண்டும். ஏனெனில் எமதுயிரும், அவனுயிரும் பிரிக்கப்படாது பிணைந்துள்ளன என்பது இதன் குறிப்பு. மன்னன் உயிருக்கு இடர் நேருமாயின் அதற்கு முன்னர் எமது உயிருக்கும் இடர் வரும் என்பதாக எமதுயிர் என்பதை முன்வைத்துக் கூறியதாகக் கூறுவர்.

இப்பாடலில் வேறொரு நயமும் உள்ளது. "உய்யும் எமதுயிரும், அவனுயிரும்" என்கிறார் கவிஞர். "எங்களது உயிர்" எனக்கூறாது "எமதுயிர்" என்கிறார். இங்கு அரசனும், அமைச்சரும் அருகில் இருந்ததால் எமதுயிர் என்றும், அரசன் சேய்மையில் இருந்ததால் அவனுயிர் என்றும் கூறுகிறார்.

இப்பாடலில் மேலும் ஒரு நயத்தையும் காணலாம். அமைச்சரும் அரசியும் ஒரே கருத்து உடையவர்கள். அரசனோ வேறு கருத்து உடையவன். ஆகையினால் எமதுயிரும், அவனுயிரும் எனப் பிரித்துக் காட்டியதாகக் கொள்ளலாம்.

இவ்வாறு அரசியும், அமைச்சரும் உரைத்தபோது, எழில்கொள் ஞானசம்பந்தர் "ஒன்றுநீர் அஞ்ச வேண்டா, உணர்விலா அமணர்தம்மை அன்று நீர் உவகை எய்த யாவரும் காண வாதில் வென்று மீனவனை வெண்ணீறு அணியச்செய்வேன்" என்றார்.

திருஞானசம்பந்தர் அடியார்கள் கூட்டத்துடன் புறப்பட்டுக் கோயிலினுள் சென்று இறைவனை வணங்கி அவர் திருவருளைப் பெற்றபின்னர் சிவிகையில் ஏறி, அமைச்சர் தொண்டர் கூட்டத்துடன் முன்செல்ல, அரசியார் சிவிகையில் பின்தொடர அரண்மனை அருகே வந்தார். அமைச்சர் முன்னே சென்று அரசனிடம் திருஞானசம்பந்தர் வருகை பற்றிய செய்தியைக் கூறினார். அப்பொழுதே அரசனின் துன்பம் சிறிது நீங்கியது.

அரசன் மணிகள் பதித்த பொன் பீடத்தைத் தன் தலைப்பக்கத்தில் இடுமாறு பணிந்தார். பின்னர் அமைச்சரிடம் "சம்பந்தரை எதிர்கொண்டு அழைத்து வருக" என்று கூறினார்.

அரசனின் செயலைக் கண்டு அங்கிருந்த சமணர்கள் வருந்தினர். "நம் ஒப்பற்றசமயத்தைப் பண்பாய் நாட்டும் வழி இதுவோ?" என்றனர். "நோயைத் தீர்க்குமாறு அவருக்கும், எங்களுக்கும் கட்டளை இடுங்கள். நோய் அவரால் தீர்ந்தாலும் எங்களால் தீர்ந்ததாகவே கூறுங்கள். அப்பொழுதுதான் நமது சமயம் நிலைபெறும்" என்று கூறினார்கள். ஆன்னால் மன்னனோ, "நான் அவ்வாறு வஞ்சனையாக பொய் கூறமாட்டேன்" என்றான். இதனைச் சேக்கிழார் "கைதவம் பேசமாட்டேன் என்று கைதவனும் சொன்னான்" என்பார். ஒரே சொல்லை இரு இடங்களில் கொடுத்து பொருளை வேறுபடுத்தி மகிழவைக்கிறார் கவிஞர்.

முதலில் உள்ள "கைதவம்" என்பதற்கு வஞ்சனை என்பது பொருளாகும். பின்னர் உள்ள "கைதவன்" என்பதற்கு வேறு பொருள். பாண்டியர்களின் மரபுப்பெயர் கைதவன் என்பதாகும். கைதவன் என்றால் கைவந்த தவத்தை உடையவன் என்றும் கூறலாம். "கைதவனும்" என்று உம்மை சேர்த்துக் கூறியது சிறப்பு. முன்னரெல்லாம் சமணர்க்கு உடன்பட்டிருந்த மன்னன் என்பது இதன் குறிப்பு ஆகும்.

திருஞானசம்பந்தர் அரண்மனை வாயிலில் சிவிகையை விட்டு இறங்கினார். அமைச்சர் முன்செல்ல, அரசியார் பின்வர அரசனை அணுகினார். அரசன் சம்பந்தர் அமரவேண்டிய மணிபீடத்தைக் காட்டினான். சம்பந்தரும் அப்பீடத்தில் அமர்ந்தார். அவருடைய அருட்பார்வையால் அரசனுடைய வெப்புநோய் சிறிது நீங்கியது.

சமணர்கள் வாது செய்ய வந்தனர். மன்னன் "பிறவாது என்ன செய்யவேண்டும். அருகர்களாகிய நீங்களும், கங்கையை அணிந்த சடையுடையவர்க்கு அடியவரான இவரும் என்மீது உள்ள இந்த வெப்பு நோயைத் தீர்க்க முயலுங்கள். வெற்றியைப் பொறுத்து இரு திறத்தாரின் தெய்வத் தன்மையை நாம் தெளிவோம்" என்றான்.

"அரசே, உமது உடலின் இடப்பாகத்தில் உள்ள வெப்பு நோயை நாங்கள் மந்திரித்துத் தீர்ப்போம்" என்று சமணர்கள் கூறினர். அரசனது உடலின்மீது தமது மயிற்பீலிக் கற்றையை மந்திரித்துத் தடவினர். ஆனாலும் வெப்புநோய் மேன்மேலும் அதிகரித்துத் தீமை செய்ததால் அதனைத் தாங்கமுடியாத மன்னன் தன்னுடைய பிணியைப் போக்கவேண்டும் என்றகுறிப்புடன் சீகாழிப்பிள்ளையை நோக்கினான்.

பாண்டியன் பார்வையின் கருத்தை உணர்ந்து கொண்ட திருஞானசம்பந்தர் "திருவாலவாய்ப் பெருமான் திருநீறே மந்திரமும் மருந்துமாகித் தீர்க்கும்" எனக்கூறி

மந்திரமாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில்உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயன் திருநீறே (2-66-1)

என்ற திருப்பதிகம் பாடினார். திருநீற்றை மன்னனின் வலப்பக்கத்தில் பூசினார். உடனே வெப்புநோய் நீங்கி பூம்புனல்போல் உடல் குளிர்ந்தது. இடப்பக்கம் மிக்க அழல் எழுந்து இருபுறத்து வெப்பமும் ஒருபுறமாகி வாட்டியது.

"ஒரே நேரத்தில் கொடிய நரகம் ஒரு பக்கத்திலும், முத்தியின்பம் ஒரு பக்கத்திலும் உளதாகும். மிக்க நஞ்சின் நுகர்ச்சி ஒரு பக்கத்திலும், சுவையுடைய அமுதின் நுகர்ச்சி ஒரு பக்கத்திலும் உளதாகும். என் உடல் ஒன்றிலேயே இங்ஙனம் மாறுபட்ட இருவேறு தன்மைகளை நான் அடையப் பெற்றேன். அருகர்களே, நீங்கள் தோற்றீர்கள்! என்னை விட்டு நீங்கிச் செல்லுங்கள்!" என்று மன்னன் அமணர்களை நோக்கி உரைத்தான்.

திருஞானசம்பந்தரை நோக்கி "பெருமானே, இடப்புறத்தில் என்னை வாட்டும் வெப்பு நோயையும் விலக்கி என்னை ஆட்கொள்ள வேண்டும்" எனக்கூறித் தொழுதான். சம்பந்தர் கருணையுடன் திருநீறு கொண்டு இடப்பக்கமும் தடவினார். மன்னன் பிணிநீங்கி உய்ந்தான். அமைச்சரும், அரசியாரும் மகிழ்ந்தனர். வெப்புநோய் நீங்கிய மன்னன் சமணர்களின் முன்னிலையில் ஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து "அடியேன் உய்ந்தேன்" என்று கூறினான். பாண்டியனது வெப்பு நோயை நீக்கியது தமிழ்தானே.

நீரோட்டத்தை எதிர்த்து வந்த தமிழ்

இனிய கவிபாடிச் வெப்பு நோயைத் தீர்த்த சம்பந்தரது திறத்தைக் கண்ட சமணர்கள் அனல்வாதம் செய்தனர். அதிலும் ஞானப்பிள்ளையிடம் தோற்றனர். ஞானசம்பந்தர் சமணர்களை நோக்கி "இனி என்ன வாது செய்வோம்?" எனக் கேட்டார். "நீரும், நாங்களும் தத்தமது சமயப் பொருளை ஏட்டில் எழுதி, ஏட்டினை ஓடும் நீரில் இடவேண்டும். எது நீரோட்டத்தை எதிர்த்து நிற்கிறதோ அச்சமயமே உண்மையான சமயம்" என்றனர் அமணர்கள்.

சீகாழிப்பிள்ளையும் சரியென ஒப்புக்கொண்டார். அப்பொழுது அமைச்சர் குலச்சிறையார், "இந்த வாதில் தோற்றால், தோற்றவர் என்ன செய்வது" எனக் கேட்டார். கோபமும், பொறாமையும் கொண்ட சமணர்கள் "வாதில் அழிந்தோமாகில், வெங்கழுவேற்றுவான் இவ்வேந்தனே" என்று கூறினர். அனைவரும் வைகை ஆற்றின் கரைக்குச் சென்றனர். சமணர்கள் தமது ஏட்டில் தமது மந்திரமாகிய "அஸ்தி நாஸ்தி" என்றதனை எழுதி ஏட்டினை ஓடும் நீரில் விடுத்தார்கள். அது விரைந்து கடலை நோக்கிச் சென்றது.

திருஞானசம்பந்தரின் திருக்கரத்தால் தீண்டப் பெற்று புண்ணிய திருநீறு பூசப்பெற்றபாண்டியன் பண்டைய வினைகள் முழுவதும் நீங்கப்பெற்று முதல்வனை அறியும் தன்மை எய்தினான்.

ஆதலினால் ஞானசம்பந்தர் வேந்தனையும் வாழ்த்திப் பாடினார்.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்க்கவே (3–54–1)

இப்பைந்தமிழ் பதிகத்தைப் பாடியருளிப் பலரும் அறிய அதனை எழுதி அந்தத் திரு ஏட்டினை தமது திருக்கைகளால் வைகை ஆற்றில் இட்டருளினார். திருஞானசம்பந்தரின் வாழ்க அந்தனர் எனத் தொடங்கும் இப்பத்திகம் பனிரெண்டு பாக்களையுடையது. மற்றபதிகங்கள் பதினோரு பாக்களையுடையது. காரணம் என்ன? சிவஞானபோதம் என்னும் நூலுள் காட்டப்பெறும் பன்னிரெண்டு சூத்திரங்களின் பொருளை இப்பதிகம் உட்கொண்டதாகக் கூறுவர்.

அறவாழ்வு நடத்தும் அறவாரே உலகிற்கு இன்றியமையாதவர். ஆதலின் உலகம் அந்தணரைப் போற்றி வாழ்தலை முதற்கடமையாகக் கொள்ளல்வேண்டும். ஆகவே “வாழ்க அந்தணர்” என்றார். அடுத்து உலக நலங்கருதி வாழ்ந்து வானுலகில் வானராயுள்ள திருவள்ளுவர் போன்றோர்பால் நன்றியுடன் இருத்தல் வேண்டும் என்பார். இதனையே “வானவர்” என்றார். உயிர்க்குலங்கள் வாழ யாவரும் உளங்கொண்டு பணி செய்தல் வேண்டும் என்பதற்காக “ஆனினம்” என்றார்.

ஓரறிவு முதல் ஆறறிவு பெற்றமாந்தர் உள்ளிட்ட உலகில் எவ்வுயிரும் பயன்பெறமழைவேண்டி இறைவனைத் தொழுவீர் என்பார். இதனையே "வீழ்க தண்புனல்" என்றார். இவ்வளவு நலங்கள் நாட்டிற்கு கிடைத்தாலும், ஆளும் தகுதியுடைய நல்லவன், தலைவனாக (அரசன்) வேண்டும். ஆதலின் அவன் வகுத்த நல்வழி நின்றுய்தல் வேண்டின் அவனைப் போற்றுவீர் என்பார். இதனையே "வேந்தனும் ஓங்கு" என்கிறார். உலகினை வருத்தும் அறியாமை, அதன் விளைவான துன்பங்கள், வறுமை தீமைகள் ஒழிக என்பார். இதனையே "ஆழ்க தீயது" என்கிறார்.

உயிர்களின்பால் கொண்ட கழிபேர் இரக்கத்தால் எங்கும் இறைவன் புகழே நிறைக என்பார். இதனை "எல்லாம் அரன் நாமமே சூழ்க" என்கிறார். வையகம் முழுவதும் துன்பத்திலிருந்து நீங்குவதாக என்பார். இதனை "ஆழ்க தீயது" என்கிறார்.

மாதவர் மனம் பிறவி ஆற்றில் எதிரேறுவது போல் சம்பந்தர் இட்ட திருஏடு வைகையாற்றில் நீரைக் கிழித்துக்கொண்டு பிரவாகத்திற்கு எதிராக முன்னேறிச் சென்றது. "எல்லாப் பொருளும் சிவமே" என்று எழுதும் ஏட்டில் "வேந்தன் ஓங்குக" என்று பாடியருளதனால் திருவளர்மார்பன், அநபாயச் சோழனுடைய வளையாத செங்கோலைப்போல் பாண்டிய மன்னனின் கூன் நிமிர்ந்தது. இதனைச் சேக்கிழார்,

எம்பிரான் சிவனே எல்லாப்
பொருளும் என்றுஎழுதும் ஏட்டில்
தம்பிரான் அருளாளல் வேந்தன்
தன்னை முன்ஓங்கப் பாட
அம்புய மலராள் மார்பன்
அனபாயன் என்னும் சீர்த்திச்
செம்பியம் செங்கோல் என்னத்
தென்னவன் கூன்நிமிர்ந்தது அன்றே
(பெ.பு. 2750)

இதுவரை கூன்பாண்டியன் என்றபெயர் பெற்றிருந்த நெடுமாறன், கூன் நிமிர்ந்த காரணத்தால் நின்றசீர் நெடுமாறன் ஆயினான்.

சம்பந்தரின் ஏடு வைகை ஆற்றில் எதிரேறிச் சென்றதைப் கண்ட இமயவர் மலர்மாரிப் பொழிந்தனர். பாண்டியன் வியப்படைந்து நின்றான். அறிவு அழிய நின்றசமணர்கள் எல்லோரும் பயந்து பதைபதைப்புடன் தலைகுனிந்து நின்றனர். குலச்சிறையார் ஏட்டினை எடுக்கச் சென்றார். மறைச் சிறுவர் ஏடு நிற்கும் பொருட்டு திருப்பதிகம் பாடினர். சிவபெருமான் திருக்கோயிலின் புறத்தே நீர் நடுவே சென்று அத்திரு ஏட்டினை எடுத்துக் கொண்டார். அதனை அனைவருக்கும் காட்டினார்.

திருஏடு நதிநீரை எதிர்த்து நின்றது தமிழால்தானே! தமிழால் என்னதான் முடியாது?

ஆண் பெண்ணாக மாறுதல்

திருவோத்தூர்

இது தொண்டை நாட்டில் 8–வது தலம். தொண்டை நாட்டிலே ஓங்கி புகழ் ஒளி வீசும் திருப்பதிகளிலேயே தலையாயது இத்தலம். ஒத்து என்றால் வேதம். மாதவர்க்கும் வேதத்தை இங்க இறைவன் ஓதுவித்தான். ஆகவே இத்தலம் திருவோத்தூர் எனப் பெயர் பெற்றது. வேதங்களுக்கு இறைவன் திருக்கூத்து காட்சியளித்த பதி ஆதலாலும் இத்தலம் திருவோத்தூர் எனப் பெயர் பெற்றது.

தொண்டைமான் என்றஅரசரின் துணையாய் நின்று எதிரிகளை அழித்துப் போரில் வெற்றி கொள்ளச் செய்து அரசாட்சியும் பெறச்செய்த திருத்தலம் இது. இத்தலம் காஞ்சிப்பதிக்கு தென்பால் சுமார் 18 மைல் தொலைவில் உள்ளது. சுவாமி பெயர் வேதநாதர். அம்மை பெயர் இளமுலைநாயகி. தீர்த்தம் சேயாறு. கருணாகரக் கவிராயர் இயற்றியுள்ள திருவோத்தூர் புராணமும், பானுகவி சுவாமிகள் இயற்றிய இளமுலையம்மை பிள்ளைத் தமிழும், பாவலர் சோ.வீரபத்திரப்பிள்ளை இயற்றிய திருவோத்தூர் நான்மணிமாலையும், சாமிநாதப்பிள்ளை இயற்றிய இளமுலையம்மை அந்தாதியும் இத்தலத்தின் புகழ் பரப்புவன ஆகும். மேலும் பெரியபுராணம் காட்டும் ஆண்பனை, பெண்பனை, பாலாறும், அருணகிரியாரின் திருப்புகழ்ப் பாடல் ஒன்றும், இராமலிங்கரின் அருட்பாக்கள் சிலவும் இத்தலத்திற்கு உண்டு.

திருஞானசம்பந்தருக்கு தொண்டை நாட்டுப் பதிகளை தரிசிக்கவேண்டும் என்றஆர்வம் எழுந்தது. ஆகவே தொண்டை நாட்டிற்குப் புறப்பட்டார். சிவபாத இருதயமும் உடன் புறப்பட்டார். அப்பொழுது சம்பந்தர் அவரை சீகாழியிலேயே இருக்கச் சொல்லிவிட்டு தான் மட்டும் தொண்டர்கள் சூழப் புறப்பட்டார். சிதம்பரம், திருத்தினை நகர், திருமாணிகுழி, திருப்பாதிரிப்புலியூர், திருவடுகூர், திருவக்கரை, திருவிரும்பை, மாகாளம், திருவதிகை, திருவாமாத்தூர், திருக்கோவலூர், திருமறையன்நல்லூர், திருவண்ணாமலை முதலிய திருப்பதிகளுக்குச் சென்று இறைவனை வணங்கிக் கொண்டு திருவோத்தூரை அடைந்தார்.

அவ்வூரிலே உள்ள தொண்டர்கள் ஞானசம்பந்தர் அங்கு வருகிறார் என அறிந்து மகிழ்ந்தனர். தோரணங்களை தெருவெங்கும் கட்டினர். வீடுகளின் வெளியே விளக்குகளை ஏற்றி வைத்தனர். நிறைகுடம் ஏந்தி பூவும், பொடியும் பொற்சுண்ணமும் தூவினர். அவரை எதிர்கொண்டு அழைத்தனர். காழிப்பிள்ளையார் முத்துச் சிவிகையினின்று இறங்கினார். அடியவர்களுடன் கோபுரத்தையும், திருமதிலையும் வலம் வந்தார். முறைப்படி பணிந்தார். திருக்கோயிலினுள்ளே சென்றார். சிவபெருமானை வணங்கித் திருப்பதிகங்கள் பாடினார்.

அவ்வூரில் சிவனடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் திருஞானசம்பந்தரிடம் வந்தார். அவரை வணங்கினார். அவர் அழுதுகொண்டே "அடியேன் சிவபெருமானுக்காக பனை மரங்கள் வைத்து வளர்த்தேன். அவை வளர்ந்தன. எல்லாம் ஆண் பனை மரங்களாக இருக்கக் கண்டு வருந்தினேன்" என்றார். மாற்று மதத்தார் "உங்கள் சிவபெருமானால் இந்த ஆண் பனை மரங்களை பெண் பனை மரங்களாக மாற்ற முடியாமா?" எனக்கேட்டு ஏளனம் செய்கின்றனர். என்னை மிகவும் இழிவாகப் பேசுகின்றனர். ஆகவே ஆண் பனைகளை பெண் பனைகளாக்க வேண்டுகிறேன் என்றார். அதனைக் கேட்ட பிள்ளையார், திருக்கோயிலினுள்ளே நுழைந்து ஆண்டவனை நினைத்து உருகினார்.

பூத்தேர்ந்து ஆயன கொண்டு நின் பொன்னடி
ஏத்தா தார்இல்லை எண்ணுங்கால்
ஓத்தூர் மேய ஒளிமழு வான்அங்கைக்
கூத்தீர் உம்ம குணங்களே (1-54-1)

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார். தம் "பத்னோராம் திருப்பாட்டில் குரும்பையான் பனையீன் குலை ஓத்தூர்" என திருக்கடைக்காப்பு பாடியபோது அப்பனை மரங்கள் எல்லாம் குலை தள்ளின. அடியார்கள் ஆரவாரம் செய்தனர். இதனைக் கண்ட சமணர்கள் தமது கைகளில் இருந்த குண்டிகளை தகர்த்து எறிந்து விட்டு சைவராயினர். இவ்வாறு ஆண் பனை மரங்களை பெண்ணாக மாற்றியதும் தமிழ்தானே!

மயிலையும் பூம்பாவையும்

மயிலாப்பூர்:

கிரேக்க நாட்டு டாலமி எழுதிய புவியியல் சாஸ்திரத்தில் மயிலாப்பூர் “மல்லியார்ப” எனக் குறிக்கப் பட்டுள்ளது. திருநாவுக்கரசர் மயிலாப்பூரைக் குறிப்பிடும்போது “மயிலாப்பு” என்றேகுறிப்பிடுகிறார். இத்தலம் தொண்டை நாட்டின் 25–வது பதி. இது சென்னையின் ஒரு பகுதியாக உள்ளது. கரிகால்சோழன் என்றசோழமன்னன் தொண்டை நாட்டைத் திருத்தி வளமாக்கினான். அவன் ஆட்சியில் இந்நாடு 24 கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. அக் கோட்டங்களில் ஒன்று சென்னைக்கு வடக்கேயுள்ள புழல் என்றஊரைத் தலைநகராகக் கொண்ட கோட்டம். இதில் மயிலாப்பூர் அடங்கி இருந்ததாகக் கூறுவர். இப்பகுதி இம்மன்னரது ஆட்சிக்கு உட்பட்டு இளந்திரையன் என்பவனால் பரிபாலிக்கப்பட்டு வந்தது என்பர்.

பார்வதி மயில் ஆட்டத்தை சுவைத்து மகிழ்தல்:

ஒருகாலத்தில் சிவபெருமான் உமையம்மையுடன் கயிலையில் வீற்றிருந்தார். அப்போது உமையம்மைக்கு பஞ்சாட்சரத்தின் பெருமையையும், திருநீற்றின் மகிமையையும் விளக்கிக் கொண்டிருந்தார். அப்போது அவர்களுக்கு அருகில் ஒரு மயில் தன் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருந்தது. அம்மையார் கணவன் உபதேசத்தைக் கவனிக்காமல் ஆடிக்கொண்டிருந்த மயில் மீது தம் கவனத்தைச் செலுத்தினார்.

சிவபெருமானின் சினம்:

இதைக் கண்ணுற்றசிவபெருமான் ''நான் சொல்வதைக் கவனிக்காமல் மயில் ஆட்டத்தைக் கவனித்துக் கொண்டிருக்கிறாய். ஆகவே நீ பூவுலகத்தில் மயிலாகப் பிறக்க வேண்டும்" எனச் சாபம் தந்தார். சாபத்திற்குப் பின் பார்வதி தெளிந்தாள். அவர் சிவபெருமானை நோக்கி "இதைத் தவிர்ப்பது எங்ஙனம்?" என்றாள். அதற்குச் சிவபெருமான் "நீ தொண்டைநாடு சென்று என்னை நோக்கித் தவம் புரிவாய்" என்றார். அவ்வாறேஉமையம்மை பூலோகத்தில் மயிலாகப் பிறந்தாள். புன்னை மரத்தடியில் சிவலிங்கம் ஒன்றைநிறுவி இறைவனை நோக்கித் தவம் புரிந்து வந்தாள்.

மயிலாப்பூர் பெயர்க்காரணம்:

புன்னை மரத்தடியில் பூசை செய்து கொண்டு வந்த உமையின் பூசையை ஏற்றுக் கொண்டு சிவபெருமான் அவர் முன் தோன்றினார். "மயிலாய் இருந்த வடிவு உன்னை விட்டு அகன்றது, இனி உன் பெயர் கற்பகவல்லி என்பதாகும்" என்றார். உமையம்மை "அடியேன் இங்குத் தவம் செய்து உய்ந்தேன். எனவே இப் பெரும்பதிக்கு மயிலை என்று பெயர் இருக்கவேண்டும், அதுமட்டுமல்ல, தாங்களும் என்னுடன் இருக்க வேண்டும்" என்று வரம் கேட்டார். எம்பெருமானும் இசைந்தார். கபாலி என்று வழங்கப்படுமாறு இலிங்கமானார். அதுமுதல் இப்பகுதி மயிலாப்பூர் என்றேவழங்கப்படுகிறது. இது மேற்கு நோக்கிய சிவத்தலங்களில் சிறப்புமிக்கது.

முருகன் வேல் வாங்குதல்:

சூரபத்மனை அழிக்க முருகப் பெருமான் கபாலீச்வரனை வழிபட்டார். அப்பெருமான் முருகனுக்கு பாசுபத அத்திரத்தை வழங்கினார். உமையம்மையும் தன் சக்திக்கு இளையவேல் ஒன்றைக் கொடுத்து ஆசி கூறினார். ஆகவே இங்குள்ள முருகன் சிங்காரவேலன் என்று அழைக்கப் படுகிறார். சூரபதுமனை வென்றபின்னர் முருகன் வள்ளி, தெய்வானையுடன் திருமயிலையில் வீற்றிருக்கிறார். அருணகிரிநாதர் மயிலைச் சிங்கார வேலனை திருப்புகழ் பாடித் துதித்துள்ளார்.

சம்பந்தரும் மயிலையும்:

திருஞானசம்பந்தர் தாம்பாடிய பாடல்களில் திருமயிலையை மடமயிலை, மாமயிலை, உயர்மயிலை என்று குறிப்பிடுகிறார். அது மட்டுமா? திருமயிலையில் வாழ்பவர்கள் கற்றார் எனவும், மயிலையில் வாழும் பெண்களை மடநல்லார், தையலார், நேரிழையார் எனவும், இளைஞர்களைக் கூர்தருவேள்வல்லார் எனவும் சிறப்பித்துக் கூறுகிறார். மயிலையைச் சம்பந்தர் மலை போல் உயர்ந்திருக்கிறது மாடம், மயில்போல் இருக்கிறது மேகம், மயில் ஆடுவதுபோல் இருக்கிறது மேகம் படிவது என வருணிக்கிறார்.

நாவுக்கரசரும், மயிலையும்:

திருநாவுக்கரசர் தாம் பாடிய ஒற்றியூர் திருத் தண்டகத்தில் “வடிவுடைய மங்கையும் தாமும் எல்லாம் வருவோரை எதிர்கொண்டோம் மயிலாப்புள்ளே!” எனவும், “மயிலாப்பில் மன்னினார் மன்னி ஏத்த” எனவும் “மங்கில் மதிதவழும் மாடவீதி மயிலாப்புள்ளார்” எனவும் பாடுகிறார்.

திருவாகிய அமுதனாரும், மயிலையும்:

தேவார காலத்திற்குப் பிற்பட்ட இவர் திருவிசைப்பா பதிகம் பாடியருளினார். இவர்தம் பாடலில் “அணியலைகள் சூழ்மயிலை” எனக் குறிப்பிடுகிறார். செந்நெல், கரும்பு விளைந்த நிலங்கள் மயிலையைச் சுற்றி இருந்ததாக இவர் பாடலால் அறிகிறோம்.

சேக்கிழாரும், மயிலையும்:

சேக்கிழார் தாம்பாடிய பெரியபுராண நூலில் திருஞானசம்பந்தர் வரலாற்றுப் பகுதியிலும், திருநாவுக்கரசர் புராணத்திலும் மயிலாப்பூரை “திருமயிலாபுரி மாடம் ஓங்கிய மயிலை” எனவும், “ஆழிசூழ் மயிலாபுரித் திருநகர்” எனவும், ‘‘பழுதில் பகழித் திருமயிலை’’ என்றும் குறிப்பிடுகிறார்.

சேக்கிழார் வாயிலார் நாயனார் புராணத்தில்

வீதி எங்கும் விழா அணிக் காளையர்
தூதுஇயங்கும் சுரும்பணித் தோகையர்
ஓதி எங்கும் ஒழியா; அணிந்த
பூதி எங்கும் புனை மணிமாடங்கள் (பெ.பு.4088) என்கிறார்.

திருமங்கையாழ்வாரும், மயிலையும்:

திருமயிலையைப் பற்றி ஆழ்வார் கூறுகிறார். திருவல்லிக்கேணி பற்றிப் பாடும்போது மயிலையைப் பற்றி குறிப்பிடுகிறார். "ஆனையின் துயரம் தீர்ப்புள் ஊர்ந்து ஆழி தொட்ட கஜேந்திர வரதனே, தென்னன் தொண்டையர்கோன் செய்த நன்மயிலைத் திருவல்லிக்கேணியில் நிற்கின்றான்" என்கிறார்.

மயிலையின் தனிச்சிறப்பு:

இத்தகைய சிறப்புகளுக்கு மேற்பட்ட ஒரு சிறப்பு கபாலீச்சுரத்துக்கு மட்டுமே உண்டு! அது என்ன? மயிலை உள்ளிட்ட பல சிவாலயங்களில் அறுபத்து மூவர்க்குச் சிலைகள் உள்ளன. இவர்களுக்குப் பூசையும் நடப்பது உண்டு. ஆனால் கபாலீச்சுவர ஆலயத்தில் நடப்பது போல எல்லா நாயன்மார்களும் திருவீதி உலா வருவதில்லை. இது கபாலீச்சுவரத்து அறுபத்து மூவர் பெருவிழாவில் நடைபெறுவதுண்டு. இது இராமர் பூசித்த தலம். பிரம்மன் முதலிய தேவர்களும் பூசித்த தலம்.

வாயிலார் நாயனார், பேயாழ்வார் ஆகியோர் அவதரித்த தலம். சீகாழிப் பிள்ளையார் எலும்பைப் பெண்ணுருவாக்கிய தலம். திருவள்ளுவர் அவதரித்த தலம். சுவாமியின் பெயர் கபாலீஸ்வரர். அம்மையின் பெயர் கற்பகவல்லியம்மை.

சிவநேசர்:

இத்தகைய மயிலையில் சிவநேச செட்டியார் என்பவர் இருந்தார். வணிகர் குலத்தைச் சேர்ந்தவர். அவர் தொன்றுதொட்டுப் பெரும்புகழ் படைத்த பெருங்குடியில் வந்தவர். பொன், மணி முதலிய செல்வங்களைப் பெற்றவர். தன்னுடைய செல்வம் பெருகக் கடல் வணிகம் செய்து வந்தார். சிவபெருமானிடத்துப் பேரன்பு கொண்டிருந்தார். பிறசமயங்களால் சைவ சமயத்திற்கு ஏற்படும் தீங்கினை களைய பாடுபட்டார். திருஞான சம்பந்தர்பால் பேரன்பு கொண்டவர்.

பிள்ளைப்பேறு இன்மை:

இத்தகைய அன்பருக்குப் பல ஆண்டுகள் பிள்ளைப்பேறு வாய்க்கவில்லை. பிள்ளைப்பேறு இல்லாத வாழ்க்கை நரக வாழ்க்கை அல்லவா? “மனதில் உள்ள முக்குற்றங்களையும் நீக்கி எத்தனை தவம் செய்தாலும், மக்களைப் பெறாத மானிடர்கள் தேவர் உலகம் சென்றாலும் இன்பம் துய்க்க முடியாதவர்கள்” என நளவெண்பா (245) கூறுகிறது.

"மனைக்கு மணி போன்றவன் மைந்தன்" என நீதி வெண்பா (76) கூறுகிறது. "மைந்தர் இல்லாதவர்க்கு இனிமை இல்லை" எனப் பாரதமும் கூறுகிறது. மக்கட்பேறு இன்மையால் செட்டியார் குடும்பத்தில் கவலையுடன் இருந்தார். பிள்ளைப்பேறு உண்டாகப் பல நோன்புகள் நோற்றுத் தவம் கிடந்தார். பல புண்ணிய சேத்திரங்களுக்கு சென்று வந்தார். பிள்ளைப்பேறு இல்லாதிருத்தல் பெருங்கொடுமை அல்லவா?

மகள் பிறத்தல்:

அவர் தானம் பல செய்தும், சிவனடியார்களுக்கு உரிய பூசைகளும் செய்து வந்தார். அவர் செய்த தவப் பயனாக மனைவி கருவுற்றாள். நன்னாளில் ஒரு பெண் மகவைப் பெற்றெடுத்தாள். அக்குழந்தை பூமகளான இலக்குமியைப்போல் விளங்கியதால் அக்குழந்தைக்குப் பூம்பாவை எனப் பெயரிட்டனர்.

பூம்பாவையின் வளர்ச்சி:

பூம்பாவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தாள். தவழ்ந்து விளையாடினாள். தளர்நடை நடந்தாள். மின்னல் காற்றின் சிறுமுனை போலவும், பவளக்கொடியின் இளந்தளிர் போலவும், மாணிக்க ஒளியின் வளர்கொழுந்து போலவும், இளம் வனப்புடன் வளர்ந்தாள். ஏழிரண்டு பருவம் அடைந்த சிறுமியானாள்.

அழகின் முதல் இளம்பதம் எனவும், அணிவிளக்கு எனவும் விளங்கிய பூம்பாவை, சிறுமிகளோடு சேர்ந்து பூப்பந்து, அம்மானை முதலிய ஆடல்களை விளையாடினாள். மண்ணால் வீடுகட்டி விளையாடினாள். பாவனைப் பொருட்களால் சமைத்து விளையாடினாள். ஊஞ்சல் ஆடினாள்.

பூம்பாவைக்கு மணம்!

இளங்கொடி போன்றதனது மகள் பூம்பாவைக்கு ஏற்றகணவன் யார் என வணிகன் ஆராய்ந்தான். இவ்வுலகில் இவளைத் திருமணம் செய்து கொள்ள ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என முடிவெடுத்தான். அந்த ஒருவர் யார்? பார்வதியின் ஞானப்பாலை உண்டவர். சிறுவயதிலிருந்தே இறைவனிடம் அன்பு கொண்டவர். அவர்தாம் திருஞான சம்பந்தர். தன் மகளைச் சம்பந்தருக்கே மணமுடித்துக் கொடுக்க வேண்டும் என்று முடிவெடுத்தார். தன்னுடைய எண்ணத்தைச் சுற்றத்தாருக்கு எல்லாம் சொல்லி வைத்தார். திருஞானசம்பந்தரோ அந்தணர். சிவநேசனோ வாணியச் செட்டியார். இது இயலுமா? என செட்டியார் சிந்திக்கவில்லை. உறவினர்கள் இது நடக்காத வேலை என்றனர். செட்டியார் உறவினர்கள் கூறியதை எடுத்துக் கொள்ளவில்லை. பூம்பாவை சம்பந்தருக்குத்தான் உரியவள் என்று இருந்தார்.